| திரு. **M.** கருணாநிதி | **1969 – 1976** |
| திரு. **M.G.** இராமச்சந்திரன் | **1977 – 1987** |
| திருமதி ஜானகி இராமச்சந்திரன் | ஜனவரி **1988** |
| திரு. **M.** கருணாநிதி | **1989 – 1991** |
| செல்வி **J.** ஜெயலலிதா | **1991 – 1996** |
| திரு. **M.** கருணாநிதி | **1996 – 2001** |
| செல்வி **J.** ஜெயலலிதா | **2001** |
| திரு. **O.** பன்னீர்செல்வம் | **2001 – 2002** |
| செல்வி **J.** ஜெயலலிதா | **2002 – 2006** |
| திரு. **M.** கருணாநிதி | **2006 – 2011** |
| செல்வி **J.** ஜெயலலிதா | **2011 – 2014** |
| திரு. **O.** பன்னீர்செல்வம் | **2014 – 2015** |
| செல்வி **J.** ஜெயலலிதா | **2015 – 2016** |
| திரு. **O.** பன்னீர்செல்வம் | **2016 – 2017** |
| திரு. எடப்பாடி **K.** பழனிசாமி | **2017** முதல் |

- வெளியுறவுக்கொள்கை என்பது மற்ற நாடுகளுடன் உறவைப் பேணுவதற்காக ஒரு நாட்டால் கவனமாக வடிவமைக்கப்பட்ட உத்திகளின் கலவையாகும்.
  இராஜதந்திரம் என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையைச் சூழலுக்குத் தகுந்தாற்போல் செயல்படுத்துவதற்கான கருவி ஆகும்.

- வெளியுறவு அமைச்சகம் எனப்படும் இந்திய வெளிவிவகார அமைச்சரவை இந்திய அரசின் ஒரு அங்கமாக இருந்து நாட்டின் வெளியுறவுகளைப் பொறுப்பேற்று நடத்துகிறது. 1986 ஆம் ஆண்டு புது டெல்லியில் நிறுவப்பட்ட இந்திய வெளிநாட்டுச் சேவை பயிற்சி நிறுவனம் இந்திய வெளியுறவுச் சேவை அதிகாரிகளுக்கு **(IFS)** பயிற்சி அளிக்கிறது.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- சிந்துவெளி நாகரிகம் முதல் சந்திரகுப்த மௌரியர் ஆட்சி வரையிலான காலத்தில் இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் பன்முகத்தன்மையையும் மிக ஆழமான நட்புறவையும் கொண்டிருந்தன. கனிஷ்கருடைய ஆட்சியின் போது ஏராளமான இந்திய சமய பரப்புக் குழுக்கள் சீனா, மத்திய ஆசியா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்குத் தங்கள் மதத்தைத் பரப்பச் சென்றனர்.

  பலுசிஸ்தான் (தற்காலத்திய பாகிஸ்தானின் எல்லைப்புற மாகாணம்) பகுதியைச் சார்ந்த கான் அப்துல் கபார்கான் இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தின் முக்கியத் தலைவரும் இந்திய தேசிய காங்கிரசின் தீவிர ஆதரவாளரும் ஆவார்.

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950 சட்டப்பிரிவு 51
  அரசு நெறிமுறையுறுத்தம் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள்
  அரசு முயற்சி செய்ய வேண்டியவைகள்:
  - சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல்
  - நாடுகளிடையே நியாயமான மற்றும் கௌரவமான உறவுகளைப் பேணுதல்
  - சர்வதேசச் சட்டம் மற்றும் சர்வதே அமைப்புகளை மதித்தல்
  - சர்வதேசப் பிரச்சனைகளை நடுவர் மன்றம் மூலம் தீர்க்க ஊக்குவித்தல்.

- 1862 -ஆம் ஆண்டு ஜுன் 26 ஆம்நாளில் விக்டோரியா மகாராணி வழங்கிய காப்புரிமை கடிதத்தின் மூலம் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மாகாணங்களில் உயர் நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் சென்னை உயர் நீதிமன்ற வளாகம் உலகிலேயே இலண்டனுக்கு அடுத்து இரண்டாவது பெரிய நீதித்துறை வளாகமாகும்.

- அசோகர் புத்த மதத்தைப் பரப்புவதற்காக அவரது மகன் மகிந்தாவையும் மகள் சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பினார். சோழ அரசர்களான

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் ராஜேந்திரன் ஆகியோர் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றினர்.

- இந்தியாவிற்குச் சொந்தமான டீன்பிகா **(Teen Bigha)** என்ற பகுதி மேற்கு வங்காளம் மற்றும் வங்காளதேசத்திற்கு இடையேயான எல்லையில் உள்ளது. குறுகலான இப்பாதை 2011 ஆம் ஆண்டு வங்காளதேசத்திற்குக் குத்தகைக்கு விடப்பட்டது.

- குரு பத்மசம்பவா எனும் புத்த துறவி இந்தியாவிலிருந்து பூடானுக்குச் சென்றார். அங்கு தனது செல்வாக்கை ஏற்படுத்தி புத்த சமயத்தைப் பரப்பியதன் மூலம் இரு நாட்டு மக்களிடையே பாரம்பரியத்தை உறுதிப்படுத்தினார்.

- உலகின் மிகப் பழமையான கடல் வர்த்தக பாதைகளில் ஒன்று சுமேரியாவில் இருந்து பஹ்ரைன் வழியாக மெலுக்கா என்று அழைக்கப்பட்ட சிந்துவெள் நாகரிகம் வரை அமைக்கப்பட்டிருந்தது.

- மக்மகான் எல்லைக்கோடு - இந்தியா, சீனா மற்றும் பூடானின் கிழக்குப் பகுதி ஆகிய பகுதிகளுக்கு இடையேயான எல்லைக்கோடு ஆகும். இது 1914 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியா, திபெத் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவின் சார்பில் இந்தியாவிற்கான செயலாளர் ஆர்தர் ஹென்றி மக்மகான் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

- கட்டுப்பாடுக் கோடு

  1949 ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்ட போர் நிறுத்தக் கோடு 1972 ஆம் ஆண்டிற்குப் பின்னர் எல்லைக் கட்டுப்பாடுக் கோடு என அழைக்கப்பட்டது. இது 1972 ஆம் ஆண்டின் சிம்லா ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லையாகும். இக்கோடு பிரிவினை செய்யப்பட்டபோது ராட்க்ளிஃப் கோடு **(RadCliffe Line)** என்று அழைக்கப்பட்டது. (ராட்க்ளிஃப் என்பவர்

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

எல்லை ஆணையத்தின் தலைவராக இருந்தார்) இக்கோடு தற்போது கட்டுப்பாடுக் கோடு என அழைக்கப்படுகிறது.

- பிரிக்ஸ் **(BRICS)** என்ற சொல் ஜிம் ஓ' நேய்ல் **(Jim O`Neill)** என்ற பிரபலமான பிரிட்டிஷ் பொருளாதார நிபுணரால் உருவாக்கப்பட்டது. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் 2050 ஆம் ஆண்டு வாக்கில் ஆறு தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளைவிட டாலர் மதிப்பில்பெரிய நாடுகளாக உருவாகும் என்றும் கடந்த 300 ஆண்டுகளின் அதிகாரப் போக்கு முற்றிலும் மாறுபடும் என்றும் அவர் ஊகித்தார்.
- மனிதன் என்பவன் இயற்கையாகவே ஓர் அரசியல் விலங்கு! இயற்கையில் ஒரு மனிதன் அரசு இல்லாமல் வாழ முடியாது! அவ்வாறு அரசின்றி வாழ்பவன் மனித குலத்திற்கு மேலானவன் அல்லது கீழானவன் ஆவான்!
  -அரசியல் என்ற நூலில் அரிஸ்டாட்டில்

- **OPEC** இலச்சினை
  - இது 1969 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு சர்வதேச வடிவமைப்புப் போட்டியின் மூலம் இச்சின்னமானது தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆஸ்திரிய வடிவமைப்பாளர் ஸ்வோபோடா இதை வடிவமைத்து போட்டியில் வென்றார். இது இந்த அமைப்பினுடைய பெயரின் வெவ்வேறு எழுத்துக்களை **(OPEC)** ஒரு வட்டமான வடிவமைப்பில் காணலாம்.

- மகிழ்ச்சி பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்து
  மகிழ்ச்சி என்பது வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சம் என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒரு மனிதன் தற்காலிக இன்பத்தை தேடுவதில் நேரத்தை செலவிடுவதைக் காட்டிலும், நிரந்தரமான மகிழ்ச்சியை தேடுவதே சிறந்தது என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒருவனின் மகிழ்ச்சி என்பது பொருள் அடிப்படையிலானவற்றில் இல்லை என்பதும் அவனுடைய முழுமையான திறமை மற்றும் உண்மையான தன்மையை அறிந்துகொள்வதில்தான் இருக்கிறது என்பதும் அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். சுருங்கச் கூறின் மகிழ்ச்சி என்பது

ஒருவனின் உள்ளேயே இருக்கிறதே தவிர வெளியில் இல்லை என்பது அவரின் கருத்து. அரிஸ்டாட்டிலின் புகழ்பெற்ற கருத்தாக்கம் ஒன்று பின்வருமாறு "மனிதனின் உயிர்வாழ்தலின் நோக்கம் மற்றும் பொருளே மகிழ்ச்சியை தேடுவதேயாகும்.

| அரசு | அரசாங்கம் |
|---|---|
| அரசு என்பது மக்கள் தொகை நிலப்பரப்பு, அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய நான்கு கூறுகளைத் கொண்டதாகும். | அரசாங்கம் என்பது அரசின் நான்கு கூறுகளில் ஒன்றாகும். |
| அரசு மூல அதிகாரங்களை பெற்றதாகும். | அரசாங்கத்தின் அதிகாரங்கள் அரசிடமிருந்து பெற்றவையாகும். |
| அரசு என்பது நிரந்தரமானது என்பதுடன் என்றென்றைக்கும் நீடித்திருப்பதாகும். | அரசாங்கம் என்பது தற்காலிகமானதாகும். மக்கள் விருப்பத்தின் பேரில் அரசாங்கங்கள் மாற்றப்படலாம். |
| அரசு என்பது காண முடியாததும், புலனாகாததும் ஆகும். | அரசாங்கம் என்பது உறுதியானது மற்றும் காணக்கூடியது. |

| அரசு | சமுதாயம் |
|---|---|
| சமுதாயம் தோன்றிய பின்னரே அரசு என்ற அமைப்பு தோன்றியது. | சமுதாயமானது அரசு தோன்றுவதற்கு முன்னரே தோன்றியது. |
| அரசின் எல்லை வரையறுக்கப்பட்டது. | சமுதாயத்தின் பரப்பெல்லை பரந்ததாகும். |
| அரசுக்கு ஒரு நிலையான நிலப்பரப்பு உண்டு. | சமுதாயத்திற்கு என நிலையான நிலப்பரப்பு எதுவும் இல்லை. |
| அரசு என்பது அரசியல் சார்ந்த அமைப்பாகும். | சமுதாயம் என்பது ஓர் சமூக அமைப்பாகும். |
| அரசிற்கு சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் உள்ளது. | சமுதாயத்திற்கு அத்தகைய அதிகாரங்கள் எதுவும் இல்லை. |

- இறையாண்மை என்றால் என்ன?

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

  - " இறையாண்மை என்பது ஒட்டுமொத்த, மற்றும் தடையில்லாத அரசின் அதிகாரமாகும். மேலும் அதீத கட்டளைத்தன்மை உடையதாகவும் காணப்படுகிறது." - ஜீன் போடின் **(Jean Bodin)**

- ஓர் மரமானது தான் முளை விடுவதை மாற்றித்தர முடியாததைப் போன்று இறையாண்மையையும் மாற்றித்தர இயலாது. இது ஓர் மனிதன் தன்னை அழித்துக் கொள்ளாமல் தனது உயிர் அல்லது ஆளுமையை மாற்றித் தர இயலாததைப் போன்றதாகும். - லைபர் **(Lieber)**

- ஜான்ஆஸ்டினின் இறையாண்மை கோட்பாடு
  - கோட்பாட்டின் மறு பெயர்கள்
    - முழுமை இறையாண்மை கோட்பாடு
    - ஒருமைவாத இறையாண்மை கோட்பாடு
    - பன்மைத்துவமில்லாத கோட்பாடு
    - ஒற்றைக்கோட்பாடு.

- பன்மைவாதக் கோட்பாடு
  - ஒரு அரசின் தன்மை என்பது பல்வேறு குழுக்களிடையே உருவாகும் முரண்பாடுகள் மற்றும் சச்சரவுகள் போன்றவற்றை அவைகளின் நலனை சிறப்பாக பாதுகாப்பதன் அடிப்படையிலேயே தீர்த்து வைப்பதாகும்.

- மக்கள் இறையாண்மை எனப்படுவது பெரும்பான்மை வாக்காளர்களின் அதிகாரமாகும். மேலும் இவ்வகை அதிகாரமானது. தோராயமாக, உலகளாவிய வாக்குரிமை செயல்படக்கூடிய நாட்டில் வாக்காளர்கள் பல்வேறு நிறுவப்பட்ட வழிமுறைகளின் வாயிலாக வெளிப்படுத்தும் விருப்பமாகும். - முனைவர் கார்னர் **(Dr. Garner)**

- பங்கீட்டு நீதி **(Distributive Justce)** என்றால் என்ன?

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- பங்கீட்டு நீதிக்கு சமத்துவக்கொள்கை தேவையாகிறது. அதாவது சமத்துவமான சமூகத்தை நிலை நிறுத்துவதற்கு சமத்துவமற்ற பங்கீடு செய்தல் அவசியம் என்பதை உறுதிப்படுத்துவதுதான் பங்கீட்டு நீதி ஆகும். உதாரணத்திற்கு, வரிவிதிப்பு விகிதமானது பணக்கார வர்க்கத்திற்கும், ஏழை வர்க்கத்திற்கும் வேறுபட்டு இருத்தல் வேண்டும். இதுபோலவே பொது வேலை வாய்ப்புக்களில் நுழைவதற்கான வரன்முறைகளில் இயல்பானவர்களுக்கும். மாற்றுத் திறனாளிகளுக்கும் மாறுபட்ட கொள்கை அவசியம் என்பதும் பங்கீட்டு நீதியே ஆகும்.

- பெருமளவில் இருக்கக்கூடிய ஏழை வர்க்கமும், சிறியளவில் வாழும் பணக்காரவர்க்கமும் உள்ள அரசில், அரசாங்கத்தின் செயல்பாடுகள் பணக்கார வர்க்கத்தின் உடைமைகளை பாதுகாக்கும் பொருட்டே அமையும்.

-ஹெரால்ட் லாஸ்கி **(Herold Laski)**

- சமத்துவத்தின் வகைகள்
    - குடிமை சமத்துவம்
    - அரசியல் சமத்துவம்
    - சமூக சமத்துவம்
    - இயற்கை சமத்துவம்
    - பொருளாதார சமத்துவம்
- சமத்துவத்தின் பல்வேறு வகைகள் யாவை?
- குடிமை சமத்துவம்
    - மதம் மற்றும் நம்பிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு இல்லாதிருத்தல்.
- அரசியல் சமத்துவம்
    - அதிகாரத்துவத்தை அணுகுவதற்கான வாய்ப்பு
    - வாக்குரிமை
- சமூக சமத்துவம்
    - சமமான வாய்ப்புகள்

- சலுகைகள்
- இயற்கை சமத்துவம்
  - இயற்கை உரிமைகள்
- பொருளாதார சமத்துவம்
  - செல்வ வளம்

- அகிம்சை அடிப்படையிலான அமெரிக்க குடிமை உரிமைகள் இயக்கத்தின் ஈடுஇணையற்ற தலைவராக மார்ட்டின் லூதர்கிங் ஜீனியர் கருதப்படுகிறார். 1950 மற்றும் 1960 -களில் சமூக நீதிக்காக கறுப்பினத்தவர்கள் அமெரிக்காவில் ஏற்படுத்திய சம உரிமைகளைப் பெறுவதற்கான புரட்சியே குடிமை உரிமைகள் இயக்கமாகும். இந்தியாவில் டாக்டர்.பி.ஆர். அம்பேத்கர் துவங்கிய கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான இயக்கமானது வரலாற்று சிறப்புமிக்கதாக இந்தியாவில் கருதப்படுகிறது. மேலும் இவ்வியக்கம் சமூக சமத்துவத்திற்கான விதையாகும்.

- "பசியோடு வாழும் ஒரு மனிதனுக்கு சுதந்திரம் என்ன நன்மையை அளிக்கமுடியும்? அவனால் அந்த சுதந்திரத்தை சாப்பிடவோ அல்லது குடிக்கவோ முடியாது. - தாமஸ் ஹாப்ஸ் **(Thomas Hobbes)**

- செல்வ வளங்களில் உள்ள வேறுபாடுகளை அகற்றி, ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், நாட்டின் வளமைகளில் சமமான பங்கை அளிப்பது பொருளாதார சமத்துவமாகும்". - ப்ரைஸ் பிரபு **(Lord Bryee)**

- பிரெஞ்சு குடியரசுகள் என்பவை 1792 -ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சிக்கான பிரகடனத்திற்கு பின்னர் தொடர்ச்சியாக உருவான குடியரசுகளைக் குறிப்பதாகும். இவ்வாறு பிரான்சின் வரலாற்றில் ஐந்து குடியரசுகள் இருந்துள்ளன. முதலாவது பிரெஞ்சு குடியரசு (1848 -1852), மூன்றாவது பிரெஞ்சு குடியரசு (1870 - 1940), நான்காவது பிரெஞ்சு குடியரசு (1946 1958) என்றும் அதன் பின்னர் ஐந்தாவது பிரெஞ்சு குடியரசு அக்டோபர் 5, 1958 - இல் ஏற்படுத்தப்பட்டது. ஐந்தாவது குடியரசானது நலிந்த மற்றும் உட்கட்சி

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

பூசல் சார்ந்த நாடாளுமன்ற அரசாங்கத்திலிருந்து மாற்றியமைக்கப்பட்ட ஒரு வலிமை வாய்ந்த மையநோக்கு மக்களாட்சியாகும்.

- சுதந்திர உரிமை (உறுப்பு 14 -18)
  - சட்டத்தின் முன் சமம் (உறுப்பு -14)
  - மத அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு தடை (உறுப்பு -15)
  - பொது வேலைவாய்ப்பில் சம வாய்ப்புரிமை (உறுப்பு - 16)
  - தீண்டாமை ஒழிப்பு (உறுப்பு - 17)
  - பட்டங்கள் ஒழிப்பு (உறுப்பு -18)

- சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்துவதாலும், மேலும் சுதந்திரத்தின் மூலம் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாலும் சுதந்திரத்திற்கு ஆபத்தான நிலை உருவாக்கப்படலாம். - ஜேம்ஸ் மாடிசன்

- தனிமனிதத்துவம்
  - தனிமனிதர்களின் நன்னெறிக்கான அரசியல் மற்றும் சமூக தத்துவம் தனிமனிதவாதம் ஆகும்.
- சமதர்மம்
  - பொருள் உற்பத்தியின் வழிமுறை விநியோகம் மற்றும் பரிமாற்றம் இவையாவும், ஒட்டு மொத்தமாக சமுதாயத்தில் வாழும் மக்களால் ஒழுங்குப்படுத்தப்பட்டும், உரிமைப்படுத்தப்பட்டும் இருக்கப்பட வேண்டும் என்ற அரசியல் மற்றும் பொருளாதார கோட்பாடே சமதர்ம கோட்பாடு ஆகும்.

- "தனியாருக்கு இடையேயான பரிமாற்றங்கள் அரசாங்க தலையீடுகளான கட்டுப்பாடு, சலுகைகள், வரி, மானியம் போன்றவை இல்லாமல் சுமூகமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் பொருளாதார முறைமையே தாராளமயக் கொள்கை **(Laisszr Faire)** எனப்படும்."

- சமத்துவம்

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- எனக்கான உரிமைகளும் எனக்கு கிடைக்கும் வாய்ப்புகளும் மற்றவர்களுக்கும் கிடைப்பதையும், இவை எவ்வாறு என்னிடமிருந்து பிரிக்கமுடியாத ஒரு உரிமையோ அவ்வாறு மற்றவர்களுக்கும் அது போன்ற உரிமையாகும் என்பதே சமத்துவமாகும். - வால்ட் விட்மேன்(**Walt whiltman)**

▪ மனிதர்கள் சிறப்பாக செயல்படும் வாய்ப்பிற்குரிய சூழ்நிலையை நிர்வகிப்பதே சுதந்திரம் ஆகும். - ஹெரால்ட் லாஸ்கி **(Harold . J.Laski)**

▪ சுதந்திரம் தொடர்பான அறிஞர்களின் கருத்துக்கள்
  - சுதந்திரம் என்பது தகுதியான மகிழ்ச்சியையும், மற்றும் வேலையையும் அனுபவிப்பதற்கு உண்டான நேர்மறையான சக்தியாகும். - கெட்டல் **(Gettel)**
  - சுதந்திரம் என்பது தனிமனிதர்கள், தங்கள் ஆளுமைத்தன்மையில் எந்தவித பாதிப்பும் இல்லாமல் தங்களை வெளிப்படுத்துவதாகும். -ஜி.டி.எச். கோல் **(G.D.H.Cole)**
  - சுதந்திரம் என்பதன் பொருள் தடைகள் இல்லாத நிலை என்பதல்ல, மாறாக சுதந்திரத்தை மேம்படுத்துவதில் உள்ளது. - மகாத்மாகாந்தி **(Mahatma Gandhi)**
  - உரிமைகள் இல்லாமல் சுதந்திரம் கிடையாது, ஏனெனில் உரிமைகள் இல்லாத சூழ்நிலையில் குடிமக்கள் அனைவரும் ஆளுமைத் தன்மையின் தேவைகளுக்கு அவசியமற்ற வெறும் சட்டத்திற்கு உட்பட்ட மக்களாவர். - ஹெரால்ட் ஜே. லாஸ்கி **(Harold. J.Laski)**

▪ பொருளாதார சுதந்திரம் என்றால், தனிமனிதருக்கு உண்டான, தேவைப்படுகிற அன்றாட வருவாய் மற்றும் உணவை தேடிக்கொள்ள ஏற்படுத்தப்படும் பாதுகாப்பு மற்றும் வாய்ப்புமாக நான் கருதுகிறேன். வேலையில்லா திண்டாத்திலிருந்தும், போதாமை மற்றும் இல்லாமையிலிருந்து உருவாகும். பயத்திலிருந்தும் நான் விடுதலை அடைய வேண்டும். ஏனெனில் இவ்வகையான பயம் ஆளுமைத்தன்மையின் வலிமையை குறைக்கச் செய்கிறது. நாளைய தேவையிலிருந்து விடுபட

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

நான் பாதுகாப்புடன் வாழ விரும்புகிறேன். - ஹொரால்டு . J.லாஸ்கி **(Harold .J.Laski)**

- மனிதர்களுக்கிடையேயான வரையறுக்கப்பட்ட சட்டங்களும், உறுதியான நிறைவேற்றுதல் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவமும் மனிதனின் குடிமை சுதந்திரத்தை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு கொண்டு செல்கிறது. - கெட்டல் **(Gettel)**

- சுதந்திரம் என்பது மனிதர்களை நோக்கி வருவது அல்ல, மாறாக மனிதர்களே சுதந்திரத்தை நோக்கி எழுச்சி கொண்டு செல்ல வேண்டும். மகிழ்வுடன் வாழ்வதற்காக சிரமப்பட்டு பெறப்படுகின்ற சுதந்திரம் ஓர் ஆசிர்வாதமாகும். - புது தில்லி, மத்திய செயலகத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

- அமைப்பெதிர்வாதம் என்பது ஒழுங்கற்ற தன்மையோ அல்லது குழப்பமான நிலையோ அன்று மாறாக அடக்குமுறையிலான மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவத்தின் ஏகபோக ஆற்றல், அதிகாரத்திலிருந்து சுதந்திரம் பெறுவதாகும்.

- அடிப்படை சுதந்திரத்தை சிறிய அளவிலான தற்காலிக பாதுகாப்பிற்காக யாரேனும் துறந்தால் அவர்கள் சுதந்திரமோ அல்லது பாதுகாப்போ கிடைப்பதற்கு தகுதியற்றவர்களாவர். - பெஞ்சமின் பிராங்ளின் **(Benjamin Franklin)**

- சுதந்திரதேவி சிலைக்கென்று ஒரு குறிக்கோள் உள்ளது. அது விடுதலையை பற்றிய உலகளாவிய நினைவூட்டலாகவும், அமெரிக்க குடிமக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் அமைந்துள்ளது.

- சட்டங்கள் இல்லையென்றால் அங்கே சுதந்திரம் இல்லை - ஜான்லாக் **(John Locke)**

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- பூமியில் இறைவனின் ஆட்சியே அரசு எனப்படுகிறது. மேலும் சமூக நீதிநெறியின் உறுப்பாகவும், நன்னெறி மேலான வெளிப்பாடாகவும் அரசு விளங்குகிறது. - ஹெகல் **(Hegel)**

- இங்கிலாந்து சட்ட நிபுணரான ஏ.வி. டைசி 'சட்டத்தின் ஆட்சி' என்ற கருத்தாக்கத்தினை 19-ஆம் நூற்றாண்டில் மேலும் பிரபலப்படுத்தியவர் ஆவார். முற்காலத்துவ ஞானிகளுக்கு 'சட்டத்தின் ஆட்சி' என்னும் சொற்றொடர் அறிமுகமில்லாவிட்டாலும் அக்கருத்தாக்கத்தினை அரிஸ்டாட்டில் எனும் ஞானி 'சட்டமே ஆளுகை புரிய வேண்டும்' என எழுதியுள்ளதை காணலாம்.

- சட்டத்தின் நோக்கங்கள் யாவை?
  - அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்தல்.
  - நியாயத்தை ஊக்குவித்தல்
  - சச்சரவுகளை தீர்த்தல்
  - நீதியை ஊக்குவித்தல்
  - ஒழுங்கையும், நிலைத்தன்மையையும் ஏற்படுத்துதல்.
  - விரும்பத்தகுந்த சமூக மற்றும் பொருளாதார நடத்தையை ஊக்குவித்தல்.
  - பெரும்பான்மை விருப்பத்தை பிரதிநிதித்துவப்படுத்துதல் (சில பிரச்சினைகளில்)
  - சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

- "குடிமக்களின் தூய உணர்விலான உத்வேகமானது, சட்டத்தின் வார்த்தைகளை விட குறைவுபடினும் அதுவே அவர்களுக்கு மிகவும் உண்மையான பாதுகாவலாகும்". - ஹெரால்டு. J.லாஸ்கி**(Haroild. J. Laski)**

- வறுமை என்பது விபத்து அல்ல. அடிமைத்தனம் மற்றும் நிறவெறி போன்றவை மனிதர்களால் உருவாக்கப்பட்டவை ஆகும். இவை

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

பள்ளிப்பாடப்புத்தகத்தை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட காவலர் பொது அறிவு கையேடு அக்டோபர் 3, 2020 முதல் கிடைக்கும்

மனிதர்களின் நடவடிக்கைகள் மூலம் களையப்பட வேண்டியவையாகும். - நெல்சன் மண்டேலா **(Nelson Mandela)**

- தனியார் சட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தனி நபர்களாகவும், அவர்களுக்கு மேலாகவும் இடையேயும் ஓர் பாரபட்சமில்லாத நடுவராக அரசு இருக்கிறது. - ஹாலந்து **(Holland)**

- "குடிமக்களின் மனங்களிலிருந்து உருவாவது அரசாகும். அவர்கள் நீதிநெறி முகவர்களாவர். அதே சமயம், நல்லியல்பு இல்லாத கெட்ட குடிமக்களிடம் இருந்து உருவாவது மோசமான அரசும். மோசமான சட்டங்களுமே ஆகும். கிரிகிரிஸ்ட் **(Gilchrist)**

- உண்மையில் முற்கால ரோமானிய சட்டங்கள் பெரும்பாலும், மதநுட்ப விதிகளை விடவும் சற்றே அதிகமாக உள்ளது. அவைகள் பெரும்பாலும் சில மத சூத்திரங்களை முறையாக பின்பற்றுவதன் மூலம் மத உரிமைகளை அடையும் வழி முறைகளாக இருந்தன. - உட்ரோ வில்சன் **(Woodrow Wilson)**

- சட்ட நிபுணர்களின் கருத்துக்கள் பெரும்பாலான நேரங்களில் சட்டமாகவே கருதப்படுகிறது. உதாரணத்திற்கு, இங்கிலாந்தில் கோக் மற்றும் ப்ளாக் ஸ்டோனின் விளக்கவுரைகள் **(Coke and Blackstone)**, அமெரிக்காவின் ஸ்டோரி மற்றும் கென்ட் **(Story and Kent)**, இந்தியாவின் விஜ்நானேஸ்வரா மற்றும் அபரார்கா **(Vijnaneswaa and Aprarka)** ஆகியோரின் விளக்கவுரைகளைக் கூறலாம். - அ.அப்பாதுரை **(A. Appadurai)**

- "தனிமனிதனின் நல்லொழுக்கத்திற்கு சரிசமமாக இயங்கக்கூடியது நல்லரசாகும். அரசியல் உடற்கூறில் ஏதேனும் ஒரு பகுதி பாதிக்கின்றபோது, ஒட்டுமொத்த உடலும் பாதிப்புறும்". - பிளாட்டோ **(Plato)**

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- "சமச்சீராக்கம் என்பது அசல் குடிமைச் சட்டத்தோடு இருக்கக்கூடிய விதிமுறை தொகுப்பாகும். நீதியின் அடிப்படையிலும், மரபுகளின் அடிப்படையிலும் உருவானதால் இவ்வுறுப்புகள் குடிமைச் சட்டத்தின் பயன்பாடுகளை மீறுமளவிற்கு தலையாய புனிதத்தன்மையை பெற்றுவிளங்குகின்றன." - சர் ஹென்றி மெய்ன் **(Sir Henty Maine)**

- நீதிநெறியானது நல்லியல்பு கடமைகளைப் பற்றியது, ஆனால் அரசால் இயற்றப்படும் சட்டமோ சட்டக் கடமைகளை பற்றியதாகும்.

- நீதிநெறி கடமைகளை மறுதலிப்பதும், சட்டக் கடமைகளை மறுதலிப்பதும் நீதிநெறிகளை முற்றிலும் நாசமாக்குகிறது. சட்ட மனசாட்சி மற்றும் நீதிநெறி மனசாட்சி என்ற இரு வேறு மனசாட்சிகள் ஒன்றோடு ஒன்று எப்போதும் ஒத்துவராதவைகளாகும். - மேக் ஐவர் **(Maclver)**

- சட்டமும், ஒழுங்கும் நீதியை நிலைநாட்டுவதற்காக இயங்குகிறது. இதை செய்ய தவறும் பட்சத்தில், சமூக வளர்ச்சியை தடுக்கும் ஆபத்தான தடுப்பு அணைகளாக இவை மாறுகின்றன. - மார்டின் லூதர்கிங் ஜீனியர் **(Martin Luther King. Jr)**

- நீதிநெறி என்றால் என்ன?
    - சமூக எதிர்மறைகளான மது, சூது, திருட்டு, வழிப்பறி, கொலை, கொள்ளை, போன்றவைகளை கட்டுப்படுத்தும் சமூக உறுப்புகள் நீதிநெறி எனப்படுகிறது. நீதிநெறிகள் தொடர்பான சட்டங்கள் எப்போதும் நிலையானவைகளாகும்.

- நீதிநெறிகள் என்பவை அரசிற்கு அத்தியாவசியமான நிபந்தனையாக விளங்குகிறது. சட்டமும், அரசும் பொதுமக்கள் கருத்தை உருவாக்கவும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் தொடர்ந்து முற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன. சட்டமானது பொதுகருத்தை பிரதிபலிப்பதோடு நல்லியல்புகளை மேம்பாட்டிற்கான குறியீடாகவும் விளங்குகிறது. -மேக்ஐவர் **(Maclver)**

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- தற்கால அரசானது, நீதிநெறி, மதம் மற்றும் இயற்கை சட்டத்தின் லட்சியவாத அடிப்படையில் நீடிக்கிறது எனலாம். அதே சமயத்தில் அரசு தனது சுய பாதுகாப்பிற்காக மேற்குறிப்பிட்ட ஒன்றையோ அல்லது அனைத்ததையுமோ மீறுகிறது. - **J.M.** கோட்ஸீ **(J.M. Coetzee)**

- அரசமைப்பு நிர்ணயசபையானது இந்திய அரசமைப்புச்சட்டத்தினை வரையறை செய்ய 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 20 நாட்கள் எடுத்துக்கொண்டது.

- வயதான பெற்றோர், முதியோர் பராமரிப்பு மற்றும் நலன் சார்ந்த சட்டம் **(MWPSC Act)** 2007 -ல் முதியவர்கள் மற்றும் பெற்றோர் நலனுக்காக இயற்றப்பட்டது.
- இச்சட்டத்தின் படி
    - முதியோருக்கு துரிதமாகவும், பயனுள்ளதாக நிவாரணத்தை வழங்க "பராமரிப்பு தீர்ப்பாயத்தினை" **(Maintenanace Tribunal)** நிறுவியது.
    - இச்சட்டத்தின்படி, பராமரிப்பு என்பது உணவு, உடுத்த உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ சிகிச்சையயும் உள்ளடக்கியது ஆகும்.
    - இச்சட்டத்தின் ஒரே நிபந்தனையாக, எவரெல்லாம் தன் சொந்த வருமானத்திலும், உடைமையின் மூலமும் தன்னை பராமரிக்க இயலாதவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் இப்பராமரிப்பின் கீழ் உட்படுவார்கள்.
    - இச்சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகபட்ச பராமரிப்புச் செலவாக மாதம் ரூ.10,000 அளிக்க கட்டாயமாக்கப்பட்டது. பராமரிப்புத் தொகையானது. உரிமை கோருபவர்களின் தேவைகள் மற்றும் அவர்கள் இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கான தேவைகளைப் பொருத்து அமைகிறது.
    - பெற்றோர்களும், முதியோர்களும் அரசாங்கத்தின் இச்சலுகையை அனுபவிக்க, பராமரிப்பு, தீர்ப்பாயத்தின் முன் பராமரிப்பு அதிகாரியிடம் தங்கள் விருப்பங்களை முறையிடலாம்.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

பள்ளிப்பாடப்புத்தகத்தை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட காவலர் பொது அறிவு கையேடு அக்டோபர் 3, 2020 முதல் கிடைக்கும்

இச்சட்டத்தின்படி, வழக்கறிஞர்கள், தீர்ப்பாயத்தின் முன் எவருக்காகவும் வாதாட இயலாது.

- முதியோர் நலனைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கக்கூடிய யாரேனும் நன்கறிந்தே அவர்களை கைவிடும்பட்சத்தில், ரூ.5,000 அபராதமோ அல்லது மூன்று மாதம் சிறை தண்டனையோ அல்லது மேற்கூறிய இரண்டு தண்டனையுமோ வழங்கப்படலாம்.

- கடமைகள் மற்றும் உரிமைகள் இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க முடியாதவை, பின் உள்ள உரிமைகள் வழங்கும் சலுகைகள்தான் தனது கடமைகளை ஒருவர் செய்வதற்கு காரணமாகிறது. -மகாத்மா காந்தி **(Mahatma Gandhi)**

- மக்களாட்சி என்பது சமூக பொருளாதார மற்றும் அரசியல் தளத்தில் வாழும் ஓர் நிதர்சனம் /மெய்மையாகும். **- G.D.** கோவார்டு கோல் **(G.D.Howard Cole)**
    - மக்களாட்சி என்பது மக்களால் நடத்தப்படும் அரசாங்கம், குறிப்பாக பெரும்பான்மை மக்களால் ஆகும்.
    - மக்களாட்சி அரசாங்கத்தில் மேலான அதிகாரம் மக்களிடம் இருக்கும். இந்த அதிகாரத்தை மக்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க பயன்படுத்துவர். இங்கு தேர்தல்கள் சீரான இடைவெளியிலும் மற்றும் சுதந்திரமாகவும் நடைபெறும். - தாமஸ் ஜெஃபரசன் **(Thomas Jefferson)**

- ராபர்ட் டாலின் கோட்பாட்டில் பின்பு ஒரு திருத்தம் செய்யப்பட்டது. அமெரிக்காவில் மக்களாட்சி செயல்படும் விதத்தை சிறப்பாக விவரிப்பதற்காக உருக்குலைந்த குழுவாட்சி என்ற கோட்பாட்டினை முன்னிறுத்த அந்த திருத்தத்தை ராபர்ட்டால் செய்தார்.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- மக்களாட்சி பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்
    - மக்களாட்சியே சமதர்மத்திற்கான பாதை ஆகும். - காரல் மார்க்ஸ் **(Karl Marx)**
    - மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காவே மக்களாலான அரசாங்க முறை ஆகும். - ஆப்ரகாம் லிங்கன் **(Abraham Lincoln)**
    - எளியோருக்கும் வலியோருக்கும் சம வாய்ப்பு வழங்குதல் மக்களாட்சியில் மட்டுமே நடைபெறும் என்பதே என் கருத்து, இது வன்முறையற்ற வழியில் மட்டுமே சாத்தியப்பட வேண்டும். - மகாத்மா காந்தி **(Mahatma Gandhi)**

- அரசமைப்பின் 73-வது மற்றும் 74-வது சட்ட திருத்தத்திற்குப் பிறகும் இந்தியாவின் சில கிராமங்களில் உள்ளாட்சித் தேர்தலே பல ஆண்டுகளாக நடைபெறாமல் உள்ளது.

| வ. எண் | நாடு | நாடாளுமன்றம் |
|---|---|---|
| **1** | இஸ்ரேல் | நெசெட் |
| **2** | ஜெர்மனி | பன்டஸ்டாக் |
| **3** | ஜப்பான் | டயட் |
| **4** | நார்வே | ஸ்டோர்டிங் |
| **5** | நேபாளம் | ராஷ்டிரிய பஞ்சாயத்து |
| **6** | பாகிஸ்தான் | தேசிய சபை |
| **7** | ரஷ்யா | டூமா |
| **8** | அமெரிக்கா | காங்கிரஸ் |
| **9** | தென் ஆப்பிரிக்கா | நாடாளுமன்றம் |
| **10** | சுவிட்சர்லாந்து | கூட்டாட்சி சபை |

| அதிகாரத்தில் உள்ளோர் எண்ணிக்கை | மக்கள் நலம் | சுயநலம் |
|---|---|---|
| ஒன்று | முடியாட்சி | கொடுங்கோல் ஆட்சி |
| சிலர் | பிரபுக்கள் ஆட்சி | சிறுகுழுவின் ஆட்சி |

| | | |
|---|---|---|
| பலர் | தூய அரசியல் அமைப்பு முறை **(Polity)** | மக்களாட்சி அல்லது கும்பல் ஆட்சி |

- பிறர் உனக்கு பாதகமானவற்றை செய்வதற்கு முன் நீ அவர்களுக்குப் பாதகமானவற்றைச் செய்துவிடு. - ஹாப்ஸ் **(Hobbes)**

- பயன்பாட்டுவாதம் என்பது அதிக எண்ணிக்கையிலானவர்களின் அதிகப்படியான மகிழ்ச்சியாகும்.
- ஜேம்ஸ் மில் மற்றும் ஜெரேமி பெந்தாம் ஆகிய பயன்பாட்டு சிந்தனையாளர்களின் வழிகாட்டுதலின் கீழ் ஜே.எஸ்.மில் கொண்டு வரப்பட்டாலும்பயன்பாட்டு வாதத்தினைப் பற்றிய மாறுபட்ட சிந்தனையினை அவர் தந்தார்.

- சட்டம் என்பது சமூக அக்கறையுடன் உள்ள நபரால் பொது நலனுக்காக பகுத்தறிவின் அடிப்படையில் குறிப்பிட்ட விதிமுறைகளை ஏற்படுத்துவதன் வேறொன்றுமில்லை. - தாமஸ் அக்வினாஸ் **(Thomas Aqinas)**

- மாக்கியவல்லியின் முறைமை **(Machiavelli`s Method)** மாக்கியவல்லியைப் பொறுத்தவரை வரலாற்று முறையே அரசியல் அறிவியலைக் கற்கும் சரியான முறையாகும். இவர் மனித விருப்பங்கள் மற்றும் பேரார்வம் ஆகியவை எப்பொழுதும் ஒரே மாதிரியானவை எனக்கூறுகிறார். வாழ்விலுள்ள சம்பவங்களை ஒப்பிடும் போது மனித இனம் ஒரே மாதிரியான பரிகாரங்களைத் தேட முனைவதுடன் ஒரே மாதிரியான நடத்தையை மீண்டும் கொண்டிருக்கின்றன எனக்கூறுகிறார். ஆகவே கடந்த காலத்தைப் படித்தறிவது என்பது தற்காலத்தைப் புரிந்து கொள்வதுடன் எதிர்காலத்திற்கான முன்கணித்தலை மேற்கொள்வதை எளிமையாக்குகிறது என்கிறார். அவர் அரசியலை வரலாறு மற்றும் மெய்மைவாத அடிப்படையில் கற்பதுடன் குறிப்பாக அரசியல் நடத்தையைக் கற்றறிவதற்கு செயலறிவு முறையினைச் சார்ந்துள்ளார். அவர் 'நடத்தையியலின் முன்னோடியாக' விவரிக்கப்படுகிறார். இளவரசன்

மற்றும் உரைக்கோவை ஆகிய இரண்டிலுமே இம்முறையினை அவர் பின்பற்றுகிறார். அவர் அதிகாரத்தினை கையகப்படுத்தி, பாதுகாத்து விரிவாக்கம் செய்யும் கருவியே அரசியல் என்பதுடன் அவற்றினை அடைவதற்காக இம்மெய்யான உலகில் உள்ள மக்களின் அறிவுத்திறனுக்குத் தக்கவாறு அணிதிரட்டி அடைவதாகக் கருதுகிறார். மாக்கியவல்லியின் முறையானது உய்த்தறிதல் அல்லது அறிவியல் முறையாக அழைக்கப்படுகிறது. இதற்கான அடிப்படை யாதெனில் அவர் பல்வேறு அரசியல் ஆட்சிகாலங்களின் மனிதனின் தன்மை பற்றிய நடைமுறை அல்லது வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் முடிவுரைகளை எட்டுகிறார். அரசியலைப் பகுத்தறியும் சில நீதிநெறிகளுக்கு மாற்றாக மனித நடத்தையின் பாங்கில் கவனம் செலுத்துவதில் அவருடைய சுயத்தன்மை உள்ளது. இருப்பினும் மாக்கியவல்லியின் முறையானது மேலோட்டமான அறிவியல் மற்றும் வரலாற்று முறையாகும் என விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். அவர் குறிப்பிட்டவற்றிலிருந்து பொதுவானவற்றை நோக்கிய நடைமுறையிலான உய்த்தறிதல் முறையினைப் பின்பற்றவில்லை. அதே நேரத்தில் 'பொதுவானவற்றிலிருந்து குறிப்பிட்டவற்றிற்கான'**(General to Particular)** நடைமுறையில் கொணர்முறையினையும் பின்பற்றவில்லை. அவர்களைப் பொறுத்தவரையிலும் மாக்கியவல்லி அரசியல் தத்துவத்தின் மையப் பிரச்சனைகளை எப்பொழுதும் தொடவில்லை. உதாரணமாக அரசு நீடித்தலுக்கான நியாயவாதம் மற்றும் அரசியல் கோட்பாட்டின் அடிப்படைகள் மற்றும் வரையறைகளைக் குறிப்பிடலாம். அவருடைய பார்வை பரந்ததாக இருந்தாலும் நடைமுறை அரசியலின் தேவைகளைத் தாண்டி அவர் எப்பொழுதும் பார்த்ததில்லை.

"அரசுகளைக் கண்டறிய மற்றும் சீர்திருத்த ஓர் ஆட்சியாளர் தேவை. அவை நிறுவப்பட்ட பின்னர் தாங்கிப் பிடிப்பதில் குடியரசிலான அரசாங்கங்கள் சிறந்தவையாகும்".

- மார்க்சியவாதத்தின் மீதான தற்கால விவாதங்களின் முக்கிய அடிப்படைச் சால்புகள் தற்காலச் சமுதாயத்தில் உருவாகும் சில முக்கிய

வடிவங்களிலான பிளவுகளை அடையாளம் காட்டுகின்றன. இவ்வகை விவாதங்கள் புதிய மார்க்சியவாதத்தின் எழுச்சிக்கு வகை செய்கின்றன.

- "தேசங்களின் செல்வங்கள் பற்றிய ஓர் ஆய்வு" - ஆதம் ஸ்மித்

- "நான் உங்களுக்கு உறுதி மொழியளிக்கிறேன், எனக்கும் உறுதி மொழியளிக்கிறேன், அமெரிக்க மக்களின் புதிய ஒப்பந்தத்தின் பேரில்" - பிராங்கிளின் ரூஸ்வெல்ட்.

- இந்த உலகில் மக்களை சமமாக பார்ப்பதற்கும், மக்களை சமமாக ஆக்குவதற்கும் மிக பெரிய வித்தியாசம் உள்ளது. - பிரெட்ரிக் ஹேயக்

- சமூகம் விடுதலையை விட சமத்துவத்தை ஆதரித்தால் இரண்டையுமே அதனால் பெற முடியாது. மாறாக சமத்துவத்தைவிட விடுதலையை நாடினால் இரண்டையுமே அது பெரும் அளவில் பெறும். - மில்டன் ஃபிரிட்மென்.

- ஜான் லாக், பாரம்பரியத் தாராளவாதத்தின் தந்தை. உயிர், விடுதலை, தனிச் சொத்துகள் சமஉரிமை.

- விளாடிமர் லெனின் 1924-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவருடைய உடல் இரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் இன்றுவரை பதனிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளமு. அவருடைய பூத உடல் இரசாயன பொருள்கள் மூலமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில், உடல் பாதுகாப்புக்கான செலவை அரசே ஏற்றுக்கொண்டது. 1991-ஆம் ஆண்டு லெனின் உருவாக்கிய நாடான USSR உடைந்த பிறகு பொதுமக்களின் நன்கொடையால் உடல் பாதுகாக்கப்படுகிறது. அவருடைய பூத உடலை அவருடைய அன்னையின் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யவேண்டும் என்று சிலர் கோருகின்றனர்.

- பிராங்கிளின் ரூஸ்வெல்ட்

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

பிராங்கிளின் ரூஸ்வெல்ட் மிக நீண்ட காலங்கள் அமெரிக்காவின் அதிபராக இருந்தவர். அமெரிக்காவின் முன்னேற்றத்திற்கு அருமையாக பணியாற்றினார். பொருளாதார மந்த நிலையில் இருந்து தனது புதிய ஒப்பந்த திட்டத்தின் மூலம் அமெரிக்காவை மீட்டெடுத்தார். கோடிக்கணக்கான மக்கள் இன்றைக்கும் அவரால் ஊக்குவிக்கப்படுகின்றனர். அவர் போலியோ நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டவர் ஆவார். அமெரிக்காவின் அதிபர் தேர்தலில் 1932- ஆம் ஆண்டு போட்டியிட்டு வெற்றி பெற்றார். மக்களிடையே வாக்குகளை சேகரிப்பதற்காக அவர் உணர்ச்சிகரமாக பேசினார். சக்கர நாற்காலியில் வரும் நான் மீண்டும் அமெரிக்காவை முன்னேற்றம் என்னும் சக்கரத்தில் அமர்த்துவேன் என்று கூறினார். வாழ்க்கையில் இன்னல்களை சமாளித்து வெற்றிச் சிகரங்களை தொடுவது எப்படி என்பதற்கு இலக்கணமாக ரூஸ்வெல்ட் இன்றைக்கும் விளங்குகிறார்.

- சமூகம் என்று ஒன்று கிடையாது. தனி ஆண்கள், பெண்கள் மற்றும் குடும்பங்கள் மட்டுமே உள்ளன. - மார்கரெட் தாட்சர்

- ஆல்பெர்ட் ஜேநாக் தனது புத்தகத்திற்கு "அரசு, நமது எதிரி" என்று பெயர் சூட்டினார்.

- காரல் பாப்பர், பிளாட்டோவை வெளிப்படையான சமூகத்தின் முதல் எதிரி என்று `Open Society and its Enemies` என்ற தனது நூலில் விமர்சித்தார்.

- "உருவத்தில் தேசியவாதம் அமைப்பில் சமதர்மவாதம்" - ஜோசப் ஸ்டாலின்

- எல்லா அரசியல் அதிகாரமும் துப்பாக்கியின் பீப்பாயில் இருந்து வருகிறது. மாவோ

- கலாச்சாரப் புரட்சி
  - 1960 களில் மாவோ தனது அதிகாரத்தை பலப்படுத்துவதற்காக புதிய புரட்சிகர இயக்கத்தைத் தொடங்கினார். மாணவர்கள், விவசாயிகள்,

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

இராணுவ வீரர்கள் ஆகியோரைக் கொண்டு சிவப்பு காவலர்களை உருவாக்கினார்.

- கிராம்சி நவீன அரசியல் சிந்தனையாளர்களில் மிகுந்த சிந்திக்கும் திறன்கொண்ட ஒருவராவார். இத்தாலியின் பாசிச அரசாங்கம் அவரைச் சிறையில் அடைத்தது. 20 ஆண்டுகளுக்கு இவரது மூளையின் செயல்பாட்டை நிறுத்தி வைக்க வேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிட்டது. சிறையில் கையில் கிடைத்த காகிதத்தில் தனது கருத்துக்களை கிராம்சி எழுதினார். பின்னர் சிறையில் இருந்து அந்த குறிப்புகள் வெளி உலகத்திற்கு கடத்தி வரப்பட்டன. ஆகவே அவரது புத்தகத்திற்கு 'சிறைச் சாலை குறிப்பேடுகள்' **(Prision Notebooks)** எனப் பெயரிடப்பட்டது.

- ஃபேபியன் சமதர்மத்தின் பொன்மொழி "தாக்கும் பொழுது நான் கடுமையாக தாக்குவேன்" என்பதாகும்.

- "புரட்சிகள் கொடுங்கோலாட்சியின் கொடுமையை குறைக்க வில்லை. இன்னொரு கொடுங்கோலனிடம் தான் ஆட்சியை ஒப்படைத்துள்ளன." - ஜார்ஜ் பெர்னார்ட்ஷா

- இந்தியாவில் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஃபேபியன் சமதர்ம வாதத்தின் ஆதரவாளர் ஆவார்.

- பாசிச கொள்கை, மக்களாட்சி, சமதர்மவாதம் மற்றும் பொதுவுடைமைவாதத்திற்கு எதிராக தோன்றியது. மக்களாட்சியும், சமதர்மவாதமும் நவீன காலத்தின் முற்போக்கு சிந்தனையை பிரதிபலித்தன. பாசிசம் இதற்கு எதிராக செயல்பட்டது.

- குளேரிஸ்டீபன் பெண்களும் மனிதர்களே என்ற தீவிர கருத்துக்குப் பெயர் தான் பெண்ணியம்

- ஆணிற்கும், பெண்ணிற்கும் உள்ள சமத்துவத்தையும் முழு மனிதத்துவத்தையும் கண்டு கொள்பவர் தான் பெண்ணியவாதி ஆவார்.- குளேரிஸ்டீபன்.

- "நாம் பெண்கள் தலைமையில் புவியில் அமைதியான வருங்காலத்தைப் பெறுவோம் அல்லது நமக்கு வருங்காலம் என்ற ஒன்றே இல்லாமல் போகும்." - வந்தனா சிவா

- தகர்ப்பமைப்பு என்றால் என்ன?
    - "வாசிப்பதற்கும், விளக்குவதற்கும், எழுதுவதற்கும் ஆன விதிகள்". - ஜாக் டெரிடா

- ஆர்.எம்.மேக்கைவர் பாசிசத்தை கீழ், நடு வர்க்கங்களின் இயக்கம் என்று வர்ணித்தார்.

- தனிமையில் பொளலிங் - இராபர்ட் டி. புட்டினம்
  இராபர்ட் டி. புட்டினம் என்ற அறிஞர் சமுதாய வாதம் தோன்றுவதில் முக்கிய பங்காற்றினார். பௌலிங் எனப்படும் விளையாட்டை புட்னம் ஆய்வு செய்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு பெரும்பான்மையான அமெரிக்கர்கள் பௌலிங் விளையாடினார்கள். தங்களிடையே சமூக தொடர்புகள், அறிவு, திறமைகள் ஆகியவற்றை வளர்த்துக் கொள்வதற்கு பௌலிங் விளையாட்டை பயன்படுத்திக் கொண்டனர்.

  நாளடைவில் தொலைக்காட்சி, வலைத்தளம் போன்ற புதிய வசதிகள், பொழுதுப் போக்கு கருவிகள் தோன்றின. அதிகமாக இந்த புதிய தொழில்நுட்ப பொழுதுப்போக்குகளில் மக்கள் ஆர்வம் செலுத்தினர். பௌலிங் விளையாட்டு மக்களிடையே செல்வாக்கை இழந்தது. மக்களின் சமூக நடவடிக்கைகள், தொடர்புகள் மறையத் தொடங்கின. காலப் போக்கில் அரசியல் ஆர்வமும் மக்களிடையே குறைந்தது. மக்களாட்சியின் வலிமையை குறைக்கும் வகையில் மக்களின் அரசியல் ஆர்வமின்மை பெரிதானது. மக்களாட்சி வலுவாக இருக்க வேண்டும் என்றால் மக்களிடையிலான சமூகத் தொடர்புகள் அதிகமாக வேண்டும்.

- ஓர் அரசியல் கட்சி என்பது மக்களின் ஒன்றிணைந்த ஒரு குழுவாக தேர்தலில் போட்டியிட்டு அரசாங்கத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றியது. அவர்கள் சமுதாயத்திற்கான கூட்டு நலனை ஊக்குவிப்பதற்கான சில கொள்கைகளையும் திட்டங்களையும் ஒப்புக்கொள்கிறார்கள். (சின்னங்கள் அல்லது பல்வேறு அரசியல் கட்சிகளின் கொடி) ஓர் அரசியல் கட்சியின் மூன்று கூறுகள் - தலைவர் - செயல் உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள்.

- மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என இந்திய அரசமைப்பின் உறுப்பு 326 விளக்குகிறது.

- இந்திய அரசமைப்பின் பகுதி XV , உறுப்புகள் 324 -329 தேர்தலைப் பற்றியதாகும்.

- எல்லோருடைய தேவைகளையும் இயற்கையால் பூர்த்திச் செய்ய முடியும். ஒருவருடைய பேராசையையும் அதனால் பூர்த்தி செய்ய முடியாது - மகாத்மா காந்தி

- தேர்தல்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் மற்றும் முடிவுகளை கற்றறியும் கல்வியே தேர்தலியல் ஆகும்.

- **FPTP** (எப்.பி.டி.பி) என்பது பன்மைவாத/ பெரும்பான்மைவாத வாக்காளர் முறையில் எளிமையான வடிவமாகும். இதில் ஒரு வேட்பாளர் செல்லத் தகுந்த வாக்குகளில் பிற வேட்பாளர்களை விட அதிக வாக்குகளை பெற்றிருந்தாலே வெற்றி பெற்றவர் ஆவார். அறுதிப் பெரும்பான்மை பெற வேண்டிய அவசியமில்லை. இந்த முறை ஒரு உறுப்பின் தொகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. இதில் வாக்காளர்கள் கட்சிக்காக அல்லாமல் வேட்பாளருக்காகவே வாக்களிக்கின்றோம்.

- தொகுதி வாக்கு என்பது ஓர் பன்மைத்து/பெரும்பான்மை முறைமையில் பல்உறுப்பினர் மாவட்டங்களில் பயன்படுத்தப்படுவதாகும். இதில்

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களுக்குத் தகுந்த வாக்குகள் வாக்காளர்களுக்கு இருக்கும். அதிகபட்ச எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் வெற்றி பெறுகிறார். பொதுவாக கட்சிகளைக் காட்டிலும் வேட்பாளருக்காக மக்கள் வாக்களித்தாலும் பெரும்பாலான முறைமைகளில் மக்கள் தங்களின் விருப்பத்திற்குத் தக்கவாறு வாக்களிக்கின்றனர்.

- இருசுற்று முறை என்பது ஓர் பன்மைத்துவ/பெரும்பான்மை முறையாகும். இதில் முதல் சுற்றில் எக்கட்சி அல்லது வேட்பாளருக்கும் அறுதிப்பெரும்பான்மை (50 சதவீதத்திற்கு மேல் ஒரு சதவீதமேனும் பெற்றிருத்தல்) பெறாத நிலையில் இரண்டாவது சுற்று தேர்தல் நடைபெறும். இரு சுற்று முறை எப்போது பெரும்பான்மை, பன்மைத்துவ வடிவம் எடுக்குமெனில், ஒருவேளை இரண்டாம் சுற்றில் இரண்டு வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிடும் நிலையில் அதிக வாக்குகள் பெற்று வெற்றிபெறுபவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இதில் அவர்கள் அறுதிப்பெரும்பான்மை பெற்றிருந்தாலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

- பஞ்சாயத்துகளைப் போன்று மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் உள்ளது.

- இந்தியாவின் முதலாவது பொதுத் தேர்தல்கள்

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் 1951-52ம் ஆண்டில் பொதுத்தேர்தல்கள் நடைபெற்று முதலாவது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டது. மொத்தமுள்ள 489 மக்களவை இடங்களில் காங்கிரஸ் கட்சி 364 இடங்களில் வெற்றி பெற்றது. இது மொத்த வாக்குப்பதிவில் 45 சதவீதமாகும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 16 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாமிடம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக ஜவஹர்லால் நேரு பதவியேற்றார். இத்தேர்தலில் 67.6 சதவீத வாக்குப்பதிவு நடைபெற்றது. 54 கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன. ஏறத்தாழ நான்கு மாதங்கள் தேர்தல் நடைபெற்றது. அக்டோபர் 25, 1951, முதல் பிப்ரவரி 21, 1952 வரை

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

இத்தேர்தல்கள் நடந்தன. 26 இந்திய மாநிலங்கள் மற்றும் 401 தொகுதிகளில் தேர்தல்நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

- 61 வது (1989 மார்ச்) அரசமைப்புச் சட்டதிருத்தத்தின் மூலமாக இந்திய குடிமக்களின் வாக்களிக்கும் வயது இருபத்தி ஒன்றிலிருந்து பதினெட்டாக குறைக்கப்பட்டது.

- தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் விவரங்கள்

| தேர்தலின் எண்ணிக்கை | சபையின் பதவிக்காலம் | தேர்தல் தேதிகள் |
|---|---|---|
| 1 | 1952 - 1957 | 1952 ஜனவரி 2,5,8,9,11,12,16,21 மற்றும் 25 (9 நாட்கள்) |
| 2 | 1957 - 1962 | 1957 மார்ச் 1,4,6,8 மற்றும் 11 (5 நாட்கள்) |
| 3 | 1962 - 1967 | 1962 பிப்ரவரி 17,19,21 மற்றும் 24 (4 நாட்கள்) |
| 4 | 1967 - 1971 | 1967 பிப்ரவரி 5,16 மற்றும் 21 (3 நாட்கள்) |
| 5 | 1971 - 1976 | 1971 மார்ச் 1,4 மற்றும் 7 (3 நாட்கள்) |
| 6 | 1977 - 1980 | 1977 ஜூன் 12 மற்றும் 14 (2 நாட்கள்) |
| 7 | 1980 - 1984 | 1980 மே 20 மற்றும் 31 (2 நாட்கள்) |
| 8 | 1985 - 1986 | 1984 டிசம்பர் 24 (1 நாள் மட்டும்) |
| 9 | 1989 - 1991 | 1969 ஜனவரி 21 (1 நாள் மட்டும்) |
| 10 | 1991 - 1996 | 1991 ஜூன் 16 (1 நாள் மட்டும்) |
| 11 | 1996 - 2001 | 1996 ஏப்ரல் 27 மற்றும் மே 2(2 நாட்கள்) |
| 12 | 2001 - 2006 | 2001 மே 10 (1 நாள் மட்டும்) |
| 13 | 2006 - 2011 | 2006 மே 8 (1 நாள் மட்டும்) |
| 14 | 2011 - 2016 | 2011 ஏப்ரல் 13 (1 நாள் மட்டும்) |
| 15 | 2016 தற்போதுவரை | 2016 மே 16 (1 நாள் மட்டும்) |

- அரசியலைத் தூய்மைப்படுத்துவதற்கான உச்சநீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு

ஜூலை 11, 2013 ல் உச்சநீதிமன்றம் வெளியிட்ட ஓர் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பில் சிறை அல்லது காவல் துறையினரின் விசாரணையில்

இருக்கும் ஒருவர் சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது என தீர்ப்பளித்துள்ளது. ஒரு நாள் முன்னதாக, ஜூலை 10, 2013-ல் அதே அமர்வு வழங்கிய தீர்ப்பில் தங்களின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருப்பின், நாடாளுமன்ற, சட்டப்பேரவை அல்லது சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் குற்றங்களுக்கான தண்டனை பற்றிய தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் அப்பொதுப் பதவிகளை வகிப்பதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவர். இப்பிரிவு நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தம்மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டால் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கும். மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 8 (4) ஐ இந்த அமர்வு நிராகரிப்பு.

- 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற 16வது மக்களவைத் தேர்தலில் 9,30,000 வாக்குச் சாவடிகளில் 553 மில்லியன் வாக்காளர்களுக்கு மேல் வாக்களித்தனர். இந்தியாவிலுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையானது அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் மேற்கு ஐரோப்பாவின் கூட்டு மக்கள் தொகையினை விட அதிகமாகும். இந்தியாவில் 30 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக ஒரு கட்சி பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

- 'நோட்டாவைப்' போன்று முன்னரே வேறொரு அம்சம் இருந்ததை அது 'எதிர்மறை வாக்களித்தல்' **(Negative Voting)** என அழைக்கப்படுகிறது.

- மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் தரப்பட்டுள்ள வேட்பாளர்கள் பட்டியலின் இறுதியில் நோட்டா வாய்ப்பு தரப்பட்டள்ளது.

- மேற்கண்டவர்களுள் எவருமில்லை **(None of the above – NOTA)** தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் நிராகரிக்கும் வாக்காளரின் உரிமை.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

பாரதிதாசன் TNPSC பயிற்சி மையம், ஓமலூர்
POLICE (6-12 இந்திய அரசியலமைப்பு உங்களுக்குத் தெரியுமா)
பள்ளிப்பாடப்புத்தகத்தை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட காவலர் பொது அறிவு கையேடு அக்டோபர் 3, 2020 முதல் கிடைக்கும்

- நோட்டாவை அனுமதிக்கும் நாடுகள்:
  கொலம்பியா, உக்ரைன், பிரேசில், வங்கதேசம், பின்லாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், சிலி, பிரான்ஸ், பெல்ஜியம் மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகள் நோட்டாவைப் பின்பற்றின. சில சமயங்களில் அமெரிக்காவும் இதனை அனுமதித்தது. 1975 -ஆம் ஆண்டு முதல் டெக்சாஸ்மாகாணம் இந்த அம்சங்களைப் பின்பற்றி வருகிறது.

- இரட்டை ஆட்சி முறை மூலமாக நிர்வாக துறைகள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் எனவும், மாகாண அரசுகளுக்கு மாற்றி தரப்பட்ட துறைகள் எனவும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. காவல், சட்டம் ஒழுங்கு , நிதி போன்ற துறைகள் ஒதுக்கப்பட்ட துறைகள் எனப்படும். அவை ஆளுநரின் வசம் இருக்கும். கல்வி மற்றும் பிற துறைகள் மாற்றித் தரப்பட்ட துறைகளாகும். அவை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இருக்கும்.

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வகைகள்
  - மாநகராட்சிகள்
  - நகராட்சிகள்
  - நகரியங்கள்
  - பேரூராட்சிகள்
  - பாளைய வாரியங்கள்

- வெளிப்படையாக வாக்களிக்கும் முறை என்பது கைகளை உயர்த்துவதன் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையாகும்.
  ரகசிய வாக்கெடுப்பு முறையில் ஓர் வாக்காளர் தனது வாக்கினைப் பிறர் அறியாதவாறு வாக்குப்பெட்டி அல்லது மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் அளிக்கிறார்.

- கிராம சபை கூட்டங்கள் ஆண்டிற்கு நான்கு முறை ஜனவரி 26 குடியரசு தினம், மே 1 உழைப்பாளர் தினம், ஆகஸ்ட் 15 சுதந்திர தினம் மற்றும் அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி ஆகிய நாட்களில் நடத்தப்படுகிறது.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- இந்தியாவின் 2011-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,50,000 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன.

- பஞ்சாயத்து ராஜ் (1959 - 2018)
    - தமிழ்நாடு நகர்ப்புற சட்டங்கள் (நான்காவது சட்டத்திருத்தம்) மசோதா 2018 மற்றும் தமிழ்நாடு பஞ்சாயத்துகள் (இரண்டாவது சட்டத்திருத்தம்) மசோதா 2018 இரண்டும் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பு அதிகாரங்களின் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்தது.

- பஞ்சாயத்து ராஜ் (1959 -2009)
    - பொன் விழா ஆண்டு - அக்டோபர் 02, 1959 ஆம் நாள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ராஜஸ்தான் மாநிலம் நகவுரில் பஞ்சாயத்து ராஜ்-க்கு அடிக்கல் நாட்டினர். ஊரக இந்தியாவை ஆள்வதில் இது ஒரு புரட்சிகரமான படியாகும். கிராமங்களின் முழுமையான வளர்ச்சி மற்றும் மக்களின் கைகளில் அதிகாரத்தை அளித்தல் என்ற நோக்குடனான இந்த பயணம் அன்று தொடங்கியது.

- தமிழ்நாட்டில் 12,564 கிராம பஞ்சாயத்தும், 388 ஊராட்சி ஒன்றியமும், 31 மாவட்ட பஞ்சாயத்தும் உள்ளது.

- 12 மாநகராட்சிகளும், 148 நகராட்சிகளும், 561 பேரூராட்சிகளும் தமிழகத்தின் நகர உள்ளாட்சி அமைப்புகளாக உள்ளன.

- வேறு நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வந்த மக்களுக்கும் சில அடிப்படை உரிமைகளை பல நாடுகள் உறுதி செய்துள்ளன. புகலிடம் கோரிய மக்கள், தஞ்சம் அடைந்த மக்கள், அகதிகளாக குடியேறியோர் என பலதரப்பட்ட மக்களுக்கும் உரிமைகள் உள்ளன. ஐக்கிய நாடுகள் மன்றத்தின் உறுப்பு நாடுகள் பலரும் அங்கீகரித்துள்ளனர்.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- நாட்டில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் மேம்பாட்டிற்காக முதல் ஆணையம் 1953 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. காகா காலேல்கர் அவர்களின் தலைமையில் அமையப்பெற்ற இதுவே சுதந்திர இந்தியாவின் முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்.

- பி.பி. மண்டல் ஆணையம்

  1979 -ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தால் பின்தங்கிய வகுப்பிற்கான இரண்டாவது ஆணையம் பி.பி. மண்டல் தலைமையில் உருவாக்கப்பட்டது. பின்தங்கிய மக்களின் சமூக, கல்வியினை மேம்படுத்த வழிமுறைகள், திட்டங்கள் பற்றிய பரிந்துரைகள் கேட்கப்பட்டன. இந்த ஆணையம் அரசு பதவிகளில் 27 சதவிகிதம் சமூக மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பின்தங்கிய வகுப்பை சேர்ந்த மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

  1980 -ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மண்டல் ஆணையம் அதன் அறிக்கையை உள்துறை அமைச்சராக இருந்த ஜெயில் சிங்கிடம் சமர்பித்தனர் அப்போது பி.பி. மண்டல் "இந்த அறிக்கையை தயார் செய்வதில் அதிகமான உழைப்பை கொடுத்துள்ளோம். மிக சரியாக கூறினால் நாம் உன்னதமான சடங்கை செய்துள்ளோம்" என்று கூறினார்.

  அடுத்த பத்தாண்டுகளுக்கு இந்த மண்டல் ஆணைய அறிக்கை உள்துறை அலுவலகத்திலேயே இருந்தது. அதை தேசிய முன்னணி அரசில் பிரதமராக இருந்த வி.பி. சிங் (1938 - 2001) 1990 - ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தினார். அந்த நேரத்தில் மண்டல் ஆணைய பரிந்துரைகள் பெரும் விவாதங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தியது. தேசிய அரசியலில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன. சந்தர்ப்பவாத அரசியலை செய்வதாக வி.பி.சிங் குற்றஞ்சாட்டப்பட்டார். எந்த ஒரு பெரிய தேசிய கட்சியும் மண்டல் ஆணைய பரிந்துரைகளுக்கு ஆதரவாக இல்லை.

  சில அமைப்புகள் மற்றும் பிரிவினர் இந்த பரிந்துரைகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இரு தரப்பு வாதங்களையும் பதினோரு நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு கேட்ட பின்பு உச்சநீதிமன்றம் இந்த மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகள் செல்லும் என தீர்ப்பளித்தது. அந்த அமர்வின் பெரும்பான்மை நீதிபதிகள் இந்த

1992-ஆம் ஆண்டு தீர்ப்பை வழங்கினர்.ஆனால் அதே சமயத்தில் பரிந்துரைகளில் சில மாற்றங்களை செய்ய அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டது.

1993 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் தேதி பணியாளர் மற்றும் பயிற்சி துறையின் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்பின் அறிக்கை பற்றிய சர்ச்சை முடிவிற்கு வந்து, திட்டம் தொடர ஆரம்பித்தது.

| வ. எண் | சென்னை மாகாணம் முதலமைச்சர்கள் | ஆண்டு |
|---|---|---|
| 1 | அ. சுப்பராயலு | 1920 -1921 |
| 2 | பனகல் ராஜா | 1921 -1926 |
| 3 | பி. சுப்புராயன் | 1926 1930 |
| 4 | பி. முனுசாமி | 1930 -1932 |
| 5 | பொப்பிலி ராஜா | 1932 -1937 |
| 6 | பி.டி. இராசன் | 1936 |
| 7 | கே.வி.ரெட்டி | 1937 |
| 8 | சி.இராஜாஜி | 1937 - 1939 |
| குறிப்பு : தமிழ்நாடு அரசு மாநில ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்ட வருடம் 1946 அக்டோபர் 20 முதல் ஏப்ரல் 30 | | |
| 9 | த.பிரகாசம் | 1946 - 1947 |
| 10 | ஓ.பி.இராமசாமி | 1947 - 1949 |
| 11 | பி.எஸ். குமாரசாமி ராஜா | 1949 - 1952 |
| 12 | சி.இராஜாஜி | 1952 - 1954 |
| 13 | கு.காமராஜ் | 1954 - 1957 |
| 14 | கு.காமராஜ் | 1957 - 1962 |
| 15 | கு.காமராஜ் | 1962 - 1963 |
| 16 | எம். பக்தவச்சலம் | 1963 - 1967 |
| 17 | சி.என். அண்ணாதுரை | 1967 - 1969 |
| 18 | மு.கருணாநிதி | 1969 - 1971 |
| 19 | மு.கருணாநிதி | 1971 - 1976 |
| 20 | எம்.ஜி. இராமச்சந்திரன் | 1977 - 1980 |
| 21 | எம்.ஜி. இராமச்சந்திரன் | 1980 -1984 |
| 22 | எம்.ஜி. இராமச்சந்திரன் | 1985 - 1987 |

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

| | | |
|---|---|---|
| 23 | ஜானகி இராமச்சந்திரன் | 1988 |
| 24 | மு.கருணாநிதி | 1989 -1991 |
| 25 | ஜெ.ஜெயலலிதா | 1991 - 1996 |
| 26 | மு. கருணாநிதி | 1996 - 2001 |
| 27 | ஜெ. ஜெயலலிதா | 2001 -2001 |
| 28 | ஓ.பன்னீர்செல்வம் | 2001 - 2002 |
| 29 | ஜெ.ஜெயலலிதா | 2002 - 2006 |
| 30 | மு.கருணாநிதி | 2006 - 2011 |
| 31 | ஜெ.ஜெயலலிதா | 2011 |
| 32 | ஓ.பன்னீர்செல்வம் | 2012 (இடைக்காலம்) |
| 33 | ஜெ.ஜெயலலிதா | மே 16, 2016 - டிசம்பர் 5, 2016 |
| 34 | ஓ.பன்னீர்செல்வம் | டிசம்பர் 2016 - பிப்ரவரி 2017 |
| 35 | க. பழனிசாமி | பிப்ரவரி 2017 தொடர்கிறார் |

- 1956 இல் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலமாக சென்னை மாகாணத்தில் இருந்து மலையாளப் பகுதிகள் கேரளாவிற்கும், தெலுங்கு பகுதிகள் ஆந்திரப் பிரதேசத்திற்கும், கன்னடப் பகுதிகள் மைசூர் மாநிலத்திற்கும் தரப்பட்டது. இங்ஙனம் சென்னை மாகாணம் தமிழர்களின் மாநிலமாக உருவானது. காமராஜர் ஓர் நிலையான ஆட்சியைத் தந்தார்.

- திருக்குறள் ஓர் மதச்சார்பற்ற நூல்
  திருக்குறளை நாம் படிக்க ஆரம்பித்த உடனேயே அது ஒரு மதச்சார்பற்ற நூல் என்ற உண்மையை நாம் அறியலாம். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பௌத்த மதம், சீக்கிய மதம், ஜைன மதம், மற்றும் இந்து மதம் போன்ற பல மதங்கள் இருந்தன. அதைப்போலவே இதை மறுப்பாளர்களும் இருந்துள்ளனர். ஆனால் மதச்சார்பற்ற தன்மை எனும் கருத்தாக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. வள்ளுவரே மத நம்பிக்கை உடையவர் தான். கடவுளைப் புகழ்ந்தே பத்து குறள்களை கொண்ட ஒரு அதிகாரத்தை

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

படைத்துள்ளார். அவரும் ஒரு மதத்தில் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு மதத்துக்கும் ஆதாரமாக இந்நூல் இல்லை, குறிப்பாக சொல்வதென்றால் எந்த மதத்தைப் பற்றியும் குறிப்பிடக்கூட இல்லை.

- தண்டி யாத்திரை பற்றிய அருந்ததி ராயின் கருத்து.

  அரசியல் களத்தின் வழியே எதிர்ப்புகள் பிரதிபலிக்கப்படுவதற்கு ஓர் வரலாறு இருக்கிறது. 1930 -இல் தண்டிக்கு காந்தி மேற்கொண்ட உப்பு யாத்திரை மிகவும் சிறப்பான உதாரணமாகும். ஆனால், உப்பு யாத்திரை என்பது ஓர் களம் மட்டுமல்ல, அது உண்மையில் சட்டமறுப்பு செயல்பாட்டினைப் பெருமளவில் உணர்த்துவதாகும். காந்தியின் தலைமையில் பல சுதந்திரப் போராட்ட வீரர்கள் குஜராத் கடற்கரைக்கு நடந்து சென்று கடல் நீரிலிருந்து உப்பெடுக்க முனையும் போது ஆயிரக்கணக்கான இந்தியர்கள் நாடு முழுவதும் ஆங்கிலேயரின் உப்பு வரிச் சட்டங்களுக்கு எதிராக தாங்களே சட்டத்தினை மீறி உப்பெடுக்கும் செயலை மேற்கொண்டனர். ஆங்கிலேய ஏகாதிபத்ய உப்புச் சட்டத்தினால் உள்நாட்டு உற்பத்தி தடைபடுவதுடன் ஆங்கிலேய இறக்குமதிகளுக்கும் ஆதரவாக அமைந்தது. இச்செயல் ஆங்கிலேய பேரரசின் பொருளாதார அடித்தளத்தின் மீதான நேரடிக் தாக்குதலாக இது அமைந்தது.

- சுப்ரமணிய பாரதியார் (டிசம்பர்) பதினோராம் நாளில் 1882 -ஆம் ஆண்டு எட்டயபுரம் என்னும் கிராமத்தில் பிறந்தார். இந்த ஊர் தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இவருடைய குழந்தை பருவ பெயர் சுப்பையா ஆகும். இவரது தந்தையார் சின்னசாமி, தாயார் லட்சுமி அம்மாள் ஆவார் . அருந்ததிராய் - பேரரசிற்கான ஓர் சாமானியனின் வழிகாட்டி.

  பாரதியார் ஏழு வயதில் தமிழ்க் கவிதைகளை எழுத ஆம்பித்தார். தன்னுடைய பதினோராம் வயதில் அவருடைய படைப்புகள் மற்றும் திறைமைகள் கற்றறிந்த அறிஞர்களால் புகழப்பட்டது. பதினோராம் வயதில் சுப்பையா அனைத்து பெருமக்கள் மற்றும் அறிஞர்கள் கூடியிருக்கும் சபையில் ஓர் சவால் விட்டார். யாரேனும் என்னுடன்

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

எந்தவித முன்னறிப்பு மற்றும் பயிற்சி இல்லாமல் எந்த தலைப்பில் வேண்டுமானாலும் பேச தயாரா? என சவால் விட்டார். இந்த போட்டி எட்டையவுர அரசவையில் ஓர் சிறப்பு அமர்வாக எட்டயபுர அரசரின் தலைமையில் நடைபெற்றது. சவாலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பு 'கல்வி' ஆகும். சுப்பையா பேச்சுப் போட்டியில் வென்றார். இது சுப்பையாவின் வாழ்க்கையில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது. இந்த மறக்க முடியாத நிகழ்வுக்கு பிறகு 'எட்டயபுர சுப்பையா' என்று அழைக்கப்பட்ட அவர் 'பாரதி' என்றும் பிற்காலத்தில் பாரதியார் என்றும் மரியாதையுடன் அழைக்கப்பட்டார். 'பாரதியார்' என்ற பெயர் அனைவராலும் குறிப்பாக தேசவாதிகளாலும் உலகெங்கிலும் உள்ள கோடான கோடி தமிழ்ப் பற்றாளர்களால் மரியாதையுடனும் நினைவு கூறப்படுகிறது. ஜூன் 1897 -இல் பாரதியாருக்கு பதினைந்து வயது நிரம்பியிருந்த போது செல்லமாளுடன் திருமணம் நடந்தது. இதன்பிறகு பாரதியார் காசிக்கு சென்றார். அங்கு தனது அத்தை குப்பாள் மற்றும் மாமா கிருஷ்ணசிவனுடன் இரண்டு ஆண்டுகள் இருந்தார். அங்கிருந்த போது தான் சமஸ்கிருதம், இந்தி மற்றும் ஆங்கில மொழியறிவினை பெற்றார். அலகாபாத் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் அவர் வெற்றி பெற்றார். காசியில் தங்கியிருந்தது பாரதியின் ஆளுமையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. முறுக்கு மீசை, சீக்கியர்களின் தலைப்பாகை மற்றும் வீறு கொண்ட நடையினை தனக்கே உரித்தானதாக்கினார். இத்தகைய வெளிப்படையான மாற்றங்களும் பாரதியாரிடம் ஏற்பட்டன.

- விவேகானந்தரின் சீடரான சகோதரி நிவேதிதாவுடனான பாரதியாரின் சந்திப்பு பெண்களுக்கான உரிமைகள் பற்றி சிந்தனையைப் பாரதியாரிடம் ஏற்படுத்தின. இது சாதியப் பிரச்சனையிலிருந்து சுதந்திரம் வரைக்கும் மற்றும் ஆன்மீகம் வரை பாடுபட்டவர். இவர் தற்கால பெண்களுக்கு சக்தி என்கிற அடையாளத்தை ஏற்படுத்தியவர். குறிப்பாக நவீன பெண்களின் அதிகாரம், பலமான, சுதந்திரமான மற்றும் ஆண்களுக்கு சமமான பங்குதாரர் என்று பெண்களை குறிப்பிடுகிறார்.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- "சுயராஜ்ய தினம்" கொண்டாடுவதற்காக 1908 -ஆம் ஆண்டு சென்னையில் மிகப்பெரிய பொதுக் கூட்டத்திற்கு இவர் ஏற்பாடு செய்தார். "வந்தே மாதரம்" "எந்தையும் தாயும், ஜெய பாரத்" போன்ற பாரதியாரின் கவிதைகள் அச்சிட்டு இலவசமாக மக்களுக்கு வினியோகிக்கப்பட்டன.

- பாரதியாரின் "பாஞ்சாலி சபதம்" என்பது ஓர் தலைசிறந்த படைப்பாகும். இது இந்தியாவை திரௌபதியாகவும், ஆங்கிலேயரை கௌரவர்களாகவும் சுதந்திர போராட்ட வீரர்களை பாண்டவர்களாகவும், உருவகப் படுத்தியிருந்தார். திரௌபதியின் போராட்டம் மூலமாக அவர் இந்திய தாய் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுள்ளதை மறைமுகமாக வெளிப்படுத்தினார்.

- பாரதியார் செப்டம்பர் பதினோராம் நாள் 1921-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். ஆனால் இவரின் இறுதி சடங்கில் பதினான்கு நபர்கள் மட்டுமே பங்கேற்றனர். இங்கு சாதியை விட்டு தள்ளி வைக்கப்படுவோம் என்பதுடன் ஆங்கிலேய அரசாங்கத்தின் அடக்கு முறையினால் ஏற்பட்ட பயமே காரணமாகும்.

- ஈ .வெ.ராமசாமி என்ற இயற்பெயரைக் கொண்ட தந்தை பெரியார் ஈரோட்டில் செல்வச் செழிப்புள்ள வணிகக் குடும்பத்தில் 1879-இல் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே தனது குடும்பத்திலும், சுற்றியுள்ள சமுதாயத்திலும் நிலவிய மூட நம்பிக்கையை எள்ளி நகையாடிய பெரியார், தொடக்கத்தில் தீவிர அரசியலில் ஈடுபடவில்லை. ஆனாலும் ஈரோடு நகர்மன்றத்தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தார்.

- மதச்சார்பு அரசு
    - மதச்சார்பின்மை கோட்பாட்டினை பின்பற்றாத அரசு மதச்சார்பு அரசு எனப்படும். மத சார்பு அரசு என்பது ஒரு மதத்தினை அரசு மதமாகக் கொண்டிருக்கும். அந்த அரசின் உயர் பதவிகள் அனைத்தும் அரசு மதத்தை பின்பற்றுவோருக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கும்.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

மதச்சார்பு அரசு உதாரணங்கள் பாகிஸ்தான், வாடிகன் நகரம் போன்றவை ஆகும்.

- கிராம சுயராஜ்ஜியம் என்ற எனது கருத்து, அருகாமையில் வாழ்வோரின் முக்கிய விருப்பங்களுக்கான சுதந்திரம், மற்ற இதர சார்பு தேவைப்படுவதால் சார்புத் தன்மையும் கொண்ட முழுமையான குடியரசு கொண்டதாகும். - மகாத்மா காந்தி

- பெரியார் ஓர் கடவுள் மறுப்புக்கொள்கையுடைய முற்போக்கான சமூக சீர்திருத்தவாதி பெரியாரின் படைப்புகள் மற்றும் மரபு

  சராசரித் தமிழனுக்குப் பெரியார் ஓர் கொள்கையாக உள்ளார். சமூக சமத்துவம், சுயமரியாதை மற்றும் மொழியின் பெருமையை முன்னிறுத்தும் அரசியலை வழி நடத்தினார். ஓர் சமூக சீர்திருத்தவாதியாக அவர் சமூகம், பண்பாடு மற்றும் பாலின சமத்துவமின்மை போன்றவற்றில் கவனம் செலுத்தினார். அவர் மக்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் போது பகுத்தறிவின் அடிப்படையில் செயல்பட வலியுறுத்தினார். பெண்கள் அனைவரும் சுதந்திரமாக இருப்பதுடன் பிள்ளை பெற்றுக் கொடுப்பதற்காக எனும் நிலையை மாற்றி அவர்களுக்கு வேலை சுயமரியாதை இயக்கம், சடங்குகளற்ற திருமணங்களை ஊக்குவித்ததுடன் பெண்களுக்கு சொத்துரிமை மற்றும் விவாகரத்து செய்யும் உரிமைகளும் வழங்க வேண்டும் எனப் போராடினார். அவர் மக்கள் தங்களின் பெயருக்கு பின் உள்ள சாதிப் பெயரை கைவிடுமாறும் அதனைக் குறிப்பிட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்தார். 1930 -களில் பட்டியல் இனத்தவரால் சமைக்கப்பட்ட உணவை பொதுக்கூட்டங்களின் பின்னர் சமபந்தியாக நடத்திக் காட்டினார்.

  காலப்போக்கில் சாதி, மத அரசியல் வேறுபாடுகளைக் கடந்த பெருமதிப்புடன் 'பெரியார்' நவீன தமிழகத்தின் தந்தையென அழைக்கப்படுகிறார்.

- மாநிலங்களவை
  - இந்திய நாடாளுமன்றத்தில் மேலவை மாநிலங்களவை என்று அழைக்கப்படுகிறது.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- மாநிலங்களவை முதல் கூட்டத்தொடர் 1952 மே 13 அன்று நடந்தது.
- பொதுவாக, மாநிலங்களவை ஆண்டுக்கு மூன்று கூட்டத்தொடர்களாகக் கூடுகிறது. அவை பின் வருமாறு
- முதல் கூட்டத்தொடர் (நிதி நிலை அறிக்கைக் கூட்டத்தொடர்) பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை நீடிக்கும்.
- இரண்டாம் கூட்டத்தொடர் (மழைக்காலக் கூட்டத்தொடர்) பொதுவாக ஜூன் தொடங்கி ஆகஸ்ட் இறுதியில் நிறைவுறுகிறது.
- மூன்றாம் கூட்டத்தொடர் (குளிர்காலக் கூட்டத்தொடர்) நவம்பர் இறுதி தொடங்கி டிசம்பர் இறுதி வரை நீடிக்கும்.

- தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம்
  - தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம் 234 உறுப்பினர்களைக் கொண்டது. 189 உறுப்பினர்கள் பொது தொகுதிகளிலிருந்தும் 45 உறுப்பினர்கள் தனித்தொகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
  - சட்டமன்றத்தில் முதல் கூட்டத் தொடர் முதல் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து (1952) 3.5.1952 அன்று தொடங்கியது.
  - அரசமைப்பு உறுப்பு 333இன் கீழ் ஆங்கிலோ-இந்திய பிரதிநிதி ஒருவர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்.
  - 16.05.2016 அன்று தமிழக சட்டமன்றத்திற்கு பொதுத் தேர்தல் நடந்ததையொட்டி 15-வது தமிழக சட்டமன்றம் 21.05.2016 அன்று அமைக்கப்பட்டது.

- பொதுக் கணக்கு குழு
  - மக்களவை உறுப்பினர்களிலிருந்து ஒருவர் பொது கணக்குக் குழுத்தலைவராக மக்களவைத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். இதில் 1967 - 1968 ஆம் ஆண்டில் முதன்முறையாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரே பொதுக் கணக்குப் குழுத்தலைவராக மக்களவைத் தலைவரால் நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழு மக்களவைத் தலைவர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஒரு நாடாளுமன்றக் குழுவாகவே கருதப்படுகிறது. 1950 ஜனவரி முதல் 2018 ஏப்ரல் வரை இக்குழு 1596 அறிக்கைகளை தாக்கல் செய்துள்ளது.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- அரசமைப்புத் திருத்தச்சட்ட முன்வரைவு
    - அரசமைப்பில் உள்ள ஒரு விதியில் திருத்தம் கோரும் சட்ட முன்வரைவுகள் அரசமைப்புத் திருத்தச்சட்டம் முன்வரைவு என்று அழைக்கப்படுகிறது. உறுப்பு 368 (2) ன் கீழ் வரும் அனைத்து விதிகளும் இதில் அடங்கும். இந்த சட்ட முன்வரைவினை நாடாளுமன்றத்தில் ஈரவைகளிலும் கொண்டு வரலாம்.

- மூன்றாம் பாலின நபர்கள் உரிமைகள் சட்ட முன்வரைவு 2014
    - மூன்றாம் பாலின நபர்கள் உரிமைகள் சட்ட முன்வரைவு திருச்சி சிவா அவர்களால் கொண்டு வரப்பட்ட தனிநபர் சட்ட முன்வரைவு ஆகும். இந்தியாவில் மூன்றாம் பாலின மக்கள் சந்தித்து வரும் புறக்கணிப்புகளுக்கு முடிவுகட்ட இம்முன்வரைவு கோருகிறது.
    - இந்த சட்ட முன்வரைவு 2015 ஏப்ரல் 24 அன்று மேலவையில் நிறைவேறியது. 2016 பிப்ரவரி 26 அன்று மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த சட்ட முன்வரைவு 45 ஆண்டுகளுக்குப் பின் மேலவையில் நிறைவேற்றப்பட்ட தனிநபர் சட்ட முன்வரைவு என்ற வரலாற்று முக்கியத்துவத்தையும் பெறுகிறது.

- முக்கிய கூட்டு கூட்டங்கள்
    - வரதட்சணை ஒழிப்புச் சட்டம் 1959 - 6 மற்றும் 9 மே 1961
    - பயங்கரவாத தடுப்புச் சட்டம் - 2002 மார்ச்

- பிரதமர் என்பவர் சமமான (அமைச்சர்களில்) முதன்மையானவர். அத்துடன் காபினட் (அமைச்சர்கள் குழு) அமைப்பின் அடிப்படைத் தூணாகவும் உள்ளார். அப்பதவியும் பொறுப்பும், அப்பதவி இருக்கும் வரையிலும் ஒப்பிடமுடியாத ஒன்றாகவும், தனிச்சிறப்புமிக்க அதிகார மையமாகவும் விளங்குகிறது. - மார்லே பிரபு

- உறுப்பு 120

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- நாடாளுமன்றத்தின் அலுவல் மொழியாக இந்தியும் ஆங்கிலமும் இருக்கும் என அரசமைப்பின் உறுப்பு 120 கூறுகிறது. இவ்வாறிருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர் எவரேனும் இந்தி மற்றும் ஆங்கிலம் தெரியாதவராக இருப்பின், அவர் தனது தாய் மொழியில் உரையாற்ற அவைத்தலைவர் அனுமதிக்கலாம் என்றும் இவ்வுறுப்பு மேலும் கூறுகிறது.

- உறுப்பு 370
  - இந்திய அரசமைப்பின் முதன்மை வரைவாளர் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் உறுப்பு 370 இன் வரைவை எழுத மறுத்தார்.
  - கோபால சுவாமி இந்த பிரிவை எழுதினார்.

- தமிழ்நாடு
  - மதராஸ் மாகாணத்தை தமிழகம் என பெயர் மாற்றக் கோரி தியாகி சங்கரலிங்கனார் 20.07.1956 முதல் 10.10.1956 வரை 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார்.
  - மதராஸ் மாநில பெயர்மாற்றச் சட்டம் 1968 மூலம் மதராஸ் மாநிலம் தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
  - காந்திய வழியில் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்தவர்.

- தலைமை வழக்குரைஞர்
  - ஒவ்வொரு மாநிலத்திற்கும் மத்திய அரசின் தலைமை வழக்குரைஞருக்கு இணையாக ஒரு அரசின் தலைமை வழக்குரைஞர் நியமிக்கப்படுகிறார். உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகும் தகுதியுடையவர்களையே ஆளுநர் தலைமை வழக்குரைஞராக நியமனம் செய்கிறார்.

- பிரதமர் அலுவலகத்தின் பல்வேறு பணிகள்
  - அரசாங்கத்தின் தலைவர் என்ற நிலையில் உள்ள பிரமருக்குத் தேவையான உதவிகளைச் செய்வது, மத்திய அமைச்சகங்களுடன்

/துறைகளுடன் மற்றும் மாநில அரசுகளுடன் தொடர்புகளைப் பராமரிப்பது.

- நிதி ஆயோக் மற்றும் தேசிய வளர்ச்சி குழு போன்றவற்றிற்கு தேவையான உதவிகளைச் செய்வது.
- ஊடகங்களுடனும், பொது மக்களுடனுமான பிரதமரின் தொடர்புகளைப் பராமரிப்பது.
- பிரதமரின் அலுவல்களுக்கு விதிகளின் படியான நடவடிக்கைகளை மேற்கொள்வது.
- குறிப்பிட்ட விதிகளின்படி பிரதமருக்கு அனுப்படும் விவகாரங்களைப் பற்றி ஆராய்ந்தறிவதற்கு பிரதமருக்கு உதவுவது.
- குடியரசுத்தலைவர், ஆளுநர்கள், அயல்நாட்டுத் தூதர்கள் போன்றவர்களுடன் இணக்கமான உறவுகளுக்காக பிரதமருக்கு உதவுவது.
- பிரதமரின் சிந்தனை ஊற்றாகச் செயல்படுவது பிறதுறைகளுக்கும் அமைச்சகங்களுக்கும் ஒதுக்கப்படாத அனைத்து விபரங்களையும் கையாள்வது.
- அமைச்சரவைத் தொடர்பான விவகாரங்களில் பிரதமர் அலுவலகம் ஈடுபடுவதில்லை. அமைச்சரவை தொடர்பான விபரங்களை அமைச்சரவை செயலகம் நேரடியாகக் கையாள்கிறது. ஆனால் அந்த அமைச்சரவை செயலகமும் பிரதமரின் வழிகாட்டுதலின்படியே செயல்படுகிறது.

- ஒருங்கிணைந்த நீதித்துறை
  - இந்தியக் கூட்டாட்சி, இரட்டை ஆட்சி அமைப்புமுறை கொண்டிருந்தாலும் இரட்டை நீதித்துறை அமைப்பைக் கொண்டிருக்கவில்லை.
  - உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும், அரசமைப்பின் கீழ் ஒரு ஒருங்கிணைந்த நீதித்துறையாகச் செயல்பட்டு அனைத்து குடிமையியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கு தீர்வு காண்கிறது. தீர்வு வழங்கும் முறையில் வேறுபாடுகளைக் களைவதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. - டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

- சர் ஹரி சிங் கோர்
    - இறுதிக்கட்ட மேல்முறையீட்டுக்காக பிரிந்து செல்லாமல் இந்தியாவிலேயே மேல்முறையீடு செய்யும் ஒரு அனைத்திந்திய தலைமை நீதிமன்றத்தின் தேவையை 1921ல் உணர்ந்தவர்.

- ஆஸ்திரேலியா நீதிமன்றம்
    - ஆஸ்திரேலியா நாட்டின் உயர்நிலை நீதியமைப்பு உயர் நீதிமன்றம் என்றே அழைக்கப்படுகிறது. அங்கு மாநிலத் தலைமை நீதிமன்றங்களே உச்ச நீதிமன்றம் என்றே அழைக்கப்படுகிறது.

- இந்திய நிலரப்பரப்பு
  இந்திய ஒன்றியம் என்ற கருத்து இந்திய நிலப்பரப்பு என்பதிலிருந்து வேறுபட்டதாகும். இந்திய ஒன்றியம் என்பது கூட்டாட்சி முறையில் உள்ள 28 மாநில அரசாங்கங்களையும், மத்திய அரசாங்கத்தையும் குறிக்கும். இந்திய நிலப்பரப்பு என்பது கீழ்க்கண்டவற்றை குறிக்கும்.
    - 28 மாநிலங்கள்
    - 9 ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள்
    - பெறப்பட்ட பகுதிகள் (சுதந்திரத்திற்குப்பின் இந்திய அரசாங்கத்தினால் முயன்று பெறப்பட்ட பகுதிகள். பாண்டிச்சேரி, டாமன் டையூ பகுதிகள் இந்திய அரசால் முயன்று பெறப்பட்டன. அவைகள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் ஆவதற்கு முன்னால் பெறப்பட்ட பகுதிகள் என அழைக்கப்பட்டன).

- மாநில தேர்தல் ஆணையம்
  சென்னையில் உள்ள மாநில தேர்தல் ஆணையம் கூட்டாட்சி முறையின் அங்கம் இல்லை. அவ்வாணையம், 73-வது, 74-வது, அரசியல் சாசன திருத்தச்சட்டங்கள் அடிப்படையில் சுயாட்சி அமைப்புகளுக்கு (பஞ்சாயத்து, நகராட்சி அமைப்புகள் தேர்தலை நடத்துகின்றது.

- தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு **(TCMPF)**

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

பள்ளிப்பாடப்புத்தகத்தை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட
காவலர் பொது அறிவு கையேடு அக்டோபர் 3, 2020 முதல் கிடைக்கும்

தமிழ்நாட்டில் கூட்டுறவு முறையில் பால் வளத்தைப் பெருக்கும் வகையில் 1972 இல் தமிழ்நாடு பால்வள மேம்பாட்டுக் கழகம் தொடங்கப்பட்டது. இது டாக்டர் குரியன் வழியில் 1981இல் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பாக விரிவுபடுத்தப்பட்டது. ஊரக, ஒன்றிய, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மூலம் இது இயங்கியது. தற்போது ஆவின் எனும் வணிக முத்திரையுடன் தமிழகம் முழுவதும் பால் தேவையை தன்னிறைவு செய்கிறது. மேலும் ஆவின் செயல்பாடுகளால் தமிழ்நாட்டில் தனிநபர் பால் நுகர்வு 1993-94இல் நாள் ஒன்றுக்கு 169 கிராம் என்று இருந்ததும் 2018 -19இல் 268 கிராமாக அதிகரித்துள்ளது.

- மனிதக் கழிவுகளை மனிதரே அகற்றும் நிலை
  மனிதக்கழிவுகளை மனிதரே அகற்றும் நிலைத் தொடர்வது அரசமைப்பில் வழங்கியுள்ள உரிமைகளுக்கு எதிரானது என்றும் எனவே இதுபோன்றே அபாயகரமான தொழில்களில் ஈடுபடுவோருக்கு உரியப் பாதுகாப்புகளை உறுதிப்படுத்துவது தொடர்புடைய அரசுகள், நிறுவனங்களின் கடமை என்று உச்ச நீதிமன்றம் கடந்த 2011ஆம் ஆண்டே முக்கியத் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால் இன்றும் கூட இந்தியாவின் பல நகரங்களில் இந்நிலை நீடிக்கிறது.

- 1955இல் நாம் ஆண்டுக்கு 500 டன் வெண்ணெய் இறக்குமதி செய்து வந்தோம். இன்று நமது கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே ஆண்டுக்கு 12,000 டன்களுக்கு அதிகமாக உற்பத்தி செய்கின்றன. இதேபோல் 1955இல் நாம் 3,000 டன் குழந்தைகளுக்கு உணவு இறக்குமதி செய்து வந்தோம். இன்று நமது கூட்டுறவு சங்கங்கள் 38,000 டன்களுக்கு அதிகமாக உற்பத்தி செய்கின்றனர். அனைத்து வகையான பால் மற்றும் பால் பொருள்களை இறக்குமதி செய்யும் நிலைமை 1975இல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. - வர்கீஸ் குரியன்

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- "இந்தியாவில் வெண்மைப் புரட்சி தொடங்கப்பட்டு பால் உற்பத்தியில் தன்னிறைவு காணப்பட்டது. இச்சாதனை முழுவதும் கூட்டுறவு முறையில் எட்டப்பட்டது". - வர்கீஸ் குரியன்

- பாண்டுங் மாநாடு
  - பாண்டுங் மாநாடு (இந்தோனேசியா) 1955ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் 29 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டு அணிசேரா இயக்கம் உருவாக்குவது பற்றி விவாதித்தனர்.

- பொதுச்சட்டம் 480 கீழ் 1954ஆம் ஆண்டு வேளாண் உற்பத்திப் பொருள்களை இந்தியாவிற்கு வழங்குவதற்கு ஐந்து ஒப்பந்தங்கள் இந்திய-அமெரிக்கா இடையே கையெழுத்தானது.

- பொருளாதாரக் கொள்கையின் தந்தை
  - அன்றைய பிரதமர் **P.V.** நரசிம்மராவ் 24.07.1991 அன்று புதிய பொருளதாரக் கொள்கை அறிவித்தப்போது டாக்டர் மன்மோகன் சிங் நிதி அமைச்சராக இருந்தார். இந்தியாவின் புதிய பொருளாதாரக் கொள்கையின் தந்தை என்று இவர் அழைக்கப்படுகிறார்.

- கிட்டத்தட்ட 31 மில்லியன் இந்திய பிறப்பு அல்லது அதன் வழித்தோன்றல்கள், புலம்பெயர்ந்த இந்தியர்களாக உலகம் முழுவதும் உள்ளனர். அவர்களுள், 3.1 மில்லியனில், 10 சதவீதம் பேர் அமெரிக்காவில் வாழும் அமெரிக்க இந்தியர்கள் ஆவர். அமெரிக்க வாழ் புலம் பெயர்ந்த இந்தியர்கள், இந்தியாவின் பொருளாதார அரசியல் மற்றும் சமூக மேம்பாட்டிற்கு பங்களிப்பதற்கு மிக இன்றியமையாத ஆதாரமாக விளங்குகிறார்கள்.

- இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் அமைப்பில் உள்ள நாடுகளின் பட்டியல் - 40

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- இலத்தீன் அமெரிக்கா என்பது பொதுவாக தென் அமெரிக்க கண்டத்தில் அமைந்துள்ள அனைத்து நாடுகள் மற்றும் இதன் கூட மெக்சிகோ, மத்திய அமெரிக்கா, மற்றும் கரீபியன் தீவுகள் ஆகியவை கொண்டவை என்று புரிந்து கொள்ளப்பட்டன.
- அர்ஜென்டினா, பொலிவியா, பிரேசில், சிலி, கொலம்பியா, கோஸ்டோரிகா, கியூபா, டொமினிகள் குடியரசு,ஈகுவடார், எல் சல்வடோர், பிரெஞ்சு, கயானா, காடியோப், கௌத்தமாலா, ஹைதி, ஹோன்டுராஸ், மெக்சிகோ, நிக்காரகுவோ, பனாமா, பராகுவே, பெரு, பியூர்டோரிக்கோ, செயிண்ட் பார்தலோமி, செயிண்ட் மார்டின், செயிண்ட் பியரி, மிக்கியூலான், உருகுவே மற்றும் வெனிசுலா போன்றவைகளும்.
- கரீபியன் நாடுகள் - ஆன்டிகுவா மற்றும் பெர்முடா, பகாமாஸ், பார்படாஸ், கியூபா, டொமினிகா, டொமினிக்கன் குடியரசு, கிரேனடா, ஹைதி, ஜமைக்கா, செயிண்ட் கீட்ஸ் மற்றும் நெவீஸ், செயிண்ட் லூசியா, செயிண்ட் வின்சன்ட் மற்றும் கிரெனாடின்ஸ், டிரினிடாட் மற்றும் டொபாகோ போன்றவைகள் ஆகும்.

- உலகம் முழுவதும் தமிழர்களின் நிலை
  - தமிழ் அலுவல் மொழிகளாக உள்ள நாடுகள் சிங்கப்பூர், இலங்கை ஆகும்.
  - தமிழ் சிறுபான்மை மொழியாக உள்ள நாடுகள் கனடா, மலேசியா, மொரிஷியஸ், செஷல்ஸ், தென் ஆப்பிரிக்கா, ரீயூனியன் மற்றும் பிரான்ஸ் ஆகியவையாகும்.

- ஆப்ரிக்கா அமைப்பில் உள்ள நாடுகளின் பட்டியல் - 54
  - அல்ஜீரியா, அங்கோலா, பெனின் போஸ்ட்வானா, பர்கினா பாஸோ, புருண்டி ,கேப் எவர்டி தீவுகள், கேமரூன், மத்திய ஆப்ரிக்கா குடியரசு, சாட், கமோராஸ் காங்கோ, ஐவோரி கோஸ்ட், டிஜிபோட்டி காங்கோ, ஜனநாயக குடியரசு, எகிப்து, மத்திய கினி, எரித்ரியா, எத்தியோப்பியா, கர்பான் காம்பியா, கானா, கினி, கினி-பிசாவு, கென்யா லெசோதோ, லைபிரியா, லிபியா, மடகாஸ்கர் மலாவி, மாலி,

மவுரித்தேனியா, மொரிஷியஸ் மொராக்கோ, மொசாம்பிக், நமீபியா, நைஜர் நைஜீரியா, ருவான்டா, சாவோ டோம் மற்றும் பிரின்சிபா, சினேகல், செசல்ஸ், சியாரா லியோன், சோமாலியா, தென் ஆப்பிரிக்கா, தெற்கு சூடான், சூடான், சுவாசிலாந்து தான்சானியா, டோகோ, துனிசியா, உகாண்டா , ஜாம்பியா, ஜிம்பாப்வே.

- 2005 ஆம் ஆண்டு, இந்தியா சார்க் மண்டல அமைப்பில், ஆப்கானிஸ்தான், உறுப்பினராக சேர்வதற்கு வழி மொழிந்தது. 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் தேதி ஆப்கானிஸ்தான் உறுப்பினராக இணைந்தது.

- இந்திய -பங்காளதேஷ் எல்லைக்கோடு
    - இந்திய-பங்களாதேஷ் எல்லைக் கோடானது 2,979 கி.மீ நீளத்தையும், 1,116 கி.மீ ஆற்று வழியையும் உள்ளடக்கியது. இவ்வெல்லை 54 ஆறுகளையும் உள்ளடக்கியது, பிரம்மபுத்திரா உட்பட இந்தியாவின் மேற்கு வங்காளம், மேகாலயா, மிசோரம், அசாம் மற்றும் திரிபுரா போன்ற மாநிலங்கள் பங்களாதேஷிடன் 4,096 கி.மீ எல்லையை பகிர்ந்து காணப்படுகின்றன.
    - திரிபுரா மற்றும் வடகிழக்கு மாநிலங்கள், பங்களாதேஷ், மியான்மர், பூடான் மற்றும் சீனா போன்ற நாடுகளால் சூழப்பட்டும், ஒரே நில மார்க்கம் அசாம் மற்றும் மேற்கு வங்காளம் மூலமாக மட்டுமே அமைந்துள்ளது. இதன் பிரதான புள்ளியாக மேற்குவங்காளத்தின் சிலிகுரி அமைந்துள்ளது.

- பிரதமர் மோடி அவர்கள் "5டி" (5T) சூத்திரத்தைக் கொண்டு வந்துள்ளார். இந்திய- நேபாள உறவுகள் "பாரம்பரியம், வாணிபம், சுற்றுலா, தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்து" போன்றவைகளால் நிர்ணயிக்கப்படும் என்று தனது மே 2018 பயணத்தின்போது கூறியுள்ளார்.

- தாலிபன் ஆட்சிக் காலத்தில் 1999 இல் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் IC 814-யை கடத்தி, ஆப்கானிஸ்தானத்தில், கந்தஹாருக்கு கொண்டு சென்றனர் நிறுத்தினர்.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- இரு பெரும் பொருளாதார வல்லரசுகளான இந்திய-சீனாவிற்கு தெற்கே இமய மலைப்பகுதியின் இடையில் அமைந்துள்ள நேபாளம் இரண்டு நாடுகளுடனான தனி முக்கியத்துவமான வரலாற்று நட்பு உறவுகளை கொண்டுள்ளது.

- வடஇலங்கையில் 3 லட்சம் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் வாழ்கின்றார்கள். இலங்கை அரசாங்கம் 2011 கணக்கெடுப்பின்படி 2 லட்சத்து 90 ஆயிரம் உள்நாட்டு இடம்பெயர்ந்தவர்கள் மறுகுடியமர்த்தப்பட்டதாகவும், மேலும் 10,000 தமிழர்கள் முகாம்களில் வசிப்பதாகவும் தகவல் வெளிவந்துள்ளது.

- ஒட்டு மொத்த தேசிய மகிழ்ச்சி
    - 1972இல் பூடானின் நான்காம் மன்னரான ஜிக்மே சிங்கே வாங்சுக் "ஒட்டுமொத்த தேசிய மகிழ்ச்சி" என்ற கருத்தை பிரகடனம் செய்தார்.

- தேசியப் பசுமை தீர்ப்பாயம்
    - தேசியப் பசுமை தீர்ப்பாயம் 2015இல் உருவாக்கப்பட்டு சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த அதீத மாசு வெளியேற்ற வழக்குகளை விசாரித்து வருகிறது.

- உலகளாவிய சூரிய ஒளி கூட்டணி
    - உலகளாவிய சூரிய கூட்டணி (ISN) என்பது இந்தியாவால் முன்னெடுக்கப்பட்ட கூட்டணியாகும். இதில் 122 நாடுகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை சூரியஒளி வெப்ப நாடுகளாகும். இவை அனைத்தும் கடக, அட்ச ரேகைகளுக்கு இடையில் அமைந்துள்ள நாடுகளாகும். தற்போது ஐ.நா உறுப்பு நாடுகளாகவும் உள்ளன.
    - இதன் அடிப்படையில் இந்தியா தாம் மேற்கொள்ளவுள்ள பங்களிப்புகளை உறுதிமொழியாக வழங்கியுள்ளது. அதன்படி, 2030ஆம் ஆண்டிற்குள் ஜி.டி.பியில் மாசு அடர்த்தி அளவு 33-35

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

விழுக்காடுக்குள் அதாவது 2005 அளவிற்குள் கட்டுப்படுத்தப்படும் என்று இந்தியா உறுதியளித்துள்ளது. அதேபோல புதைப்படிவம் சாராத மின் உற்பத்தி அளவு 2030 ஆம் ஆண்டிற்குள் 40 விழுக்காடாக உயர்த்தப்படும் எனவும் உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது. தனது வனப்பகுதிகளின் அளவு 2.5 முதல்3.0 பில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடு வாயுவை கிரகிக்கும் அளவுக்கு விரிவுப்படுத்தப்படும் (புவி வெப்பமாவதற்கு முக்கிய காரணி கார்பன்-டை-ஆக்சைடு ஆகும்).

- அதே நேரத்தில் காலநிலை இலக்குகளை எட்டுவதற்கு பன்னாட்டு நிதி உதவியும் தொழில்நுட்ப உதவியும் தேவை என்பதையும் இந்தியா வலியுறுத்தியுள்ளது. இந்த வகையில், இப்பொழுதிலிருந்து 2030 ஆம் ஆண்டு வரை காலநிலை மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள குறைந்தபட்சம் 2.5 ட்ரில்லியன் டாலர் (2014-15 ஜூலை நிலவரப்படி) நிதி உதவி தேவைப்படுவதாகவும் இந்தியா கூறியுள்ளது.

- பாரிஸ் உடன்படிக்கை மீது இந்தியா அளித்துள்ள உறுதிமொழிகள்
  - இந்த புதிய உலகளாவிய உடன்படிக்கையை செயல்படுத்தும் வண்ணம் 2020ஆம் ஆண்டிற்கு பின்னர் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள செயல்பாடுகளை ஒவ்வொரு நாடும் தாமாக முன்வந்து உறுதிமொழியாக வழங்கியுள்ளன. இது தேசிய அளவில் வரையறுக்கப்பட்டுள்ள பங்களிப்புகள் திட்டமிடல் **(INDC)** என்று அறியப்படுகிறது.

- தன் - அடையாளமாக்கல்
  - பூர்வக்குடி மக்களை வரையறை செய்யும் பன்னாட்டு உடன்படிக்கை எதுவும் இதுவரை எட்டப்படவில்லை. பூர்வக்குடி சமுதாயங்களே தங்கள் பூர்வக்குடித் தன்மையை முடிவு செய்து கொள்ள வேண்டும். இதுவே தன் அடையாளமாக்கல் எனப்படும்.

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

- பூர்வக்குடி மக்கள் நாள் - ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 9ஆம் நாளன்று உலக பூர்வக்குடி மக்கள் நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது.

- கொச்சி பன்னாட்டு விமான நிலையம்
    - கேரளாவில் அமைந்துள்ள கொச்சி பன்னாட்டு விமான நிலையமே முழுமையாக சூரிய ஒளி மின்சாரத்தால் இயங்கும் உலகின் முதல் சூரிய ஒளி மின்சார விமான நிலையமாகும்.

- நகோயா விதிமுறைகள்
    - நகோயா விதிமுறைகள் என்பது 1992 உயிரியல் பன்மைய மாநாட்டு முடிவுகளின் கீழ் 2010ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட துணை உடன்படிக்கையாகும். இது உயிரியல் பன்மையைத்தை பயன்படுத்துவது குறித்து எழுந்த கேள்விகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உடன்படிக்கையாகும். அதாவது, அணுகுதல் மற்றும் பயனடைதலில் பகிர்தல் (ABS) உடன்படிக்கையான இது நகோயா விதிமுறைகள் என்று அழைக்கப்படுகிறது. மரபியல் மூல வளங்களை நியாயமாகவும், சமமாகவும் அணுகி, பயன்களை நியாயமாகவும், சமமாகவும் பகிர்தல் குறித்த விதிமுறைகளை இது கொண்டுள்ளது.

- நகோயா விதிமுறைகள்
- இந்தியா கையெழுத்திட்டுள்ள பன்னாட்டு சிறப்பு பேரவை பிரகடனங்கள், உடன்படிக்கைகள் மற்றும் அமைப்புகள்
    - அழிந்துவரும் அரிய வனங்கள் வாழ் நீர் மற்றும் நில உயிரினங்கள் பன்னாட்டு வர்த்தக சிறப்பு மாநாடு
    - இயற்கை மற்றும் இயற்கை வளங்கள் பராமரிப்புகளை பன்னாட்டு ஒன்றியம் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு
    - வலசை செல்லும் வன உயிரினங்கள் பாதுகாப்பு சிறப்புப் பேரவை
    - பன்னாட்டு திமிங்கல ஆணையம்
    - வனப்படுத்துதலுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு

காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)

பாரதிதாசன் TNPSC பயிற்சி மையம், ஓமலூர்
POLICE (6-12 இந்திய அரசியலமைப்பு உங்களுக்குத் தெரியுமா)
பள்ளிப்பாடப்புத்தகத்தை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட
காவலர் பொது அறிவு கையேடு அக்டோபர் 3, 2020 முதல் கிடைக்கும்

- பன்னாட்டு வெப்ப மண்டல மரங்கள் அமைப்பு
- ராம்சர் சிறப்பு மாநாடு
- உயிரி பல்லுயிர் பெருக்க சிறப்புப் பேரவை
- மூங்கில் மற்றும் ராத்தல் பன்னாட்டு வலைப்பின்னல்
- ஆசியப்பசிபிக் வனமாக்கல் ஆணையம்
- காடுகள் அழிப்பு தடுப்பு ஐக்கிய நாடுகள் சிறப்புப் பேரவை
- காலநிலை மாற்றம் ஐக்கிய நாடுகள் வரையமைப்பு சிறப்புப் பேரவை
- கியோட்டோ ஒப்பந்தம்.




காவலர் தேர்வுக்கான பொது அறிவுப் பாடப்புத்தகம் கிடைக்கும் (வெளியீடு - Rithanya Publications, salem)
(புதிய பாடத்திட்டம் மற்றும் 6-10 ஆம் வகுப்பு வரை உள்ள உங்களுக்குத் தெரியுமா பகுதி உள்ளடக்கிய புத்தகம்)
தொடர்புக்கு: 9788819401, 9751214117, 9384593666 (வாட்ஸ்ஆப் மட்டும்)